தொழில்

ஆசிரியர்: K. பெருமாள் உடையார்.

2

INDUSTRY



புதிய 25 காசு

1-8-59.

சிமிண்ட்

ஏ. ஸி. ஸி-சார்மினர் பிராண்ட்,

கீழ்க்கண்ட எங்கள் டிப்போக்களில்
ரெடி ஸ்டாக்குகள் உள்ளன.

- 15, செம்புதாஸ் தெரு, சென்னை-1.
- தி சிமிண்ட் கான்கிரிட் ஒர்க்ஸ், 11-A, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை.
- 283-A. திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை.
- 131, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.
- 14, கச்சேரி ரோடு, மைலாப்பூர், சென்னை.
- "ஜெயா மான்ஷன்ஸ்" பூந்தமல்லி ஹைரோடு, சென்னை.
- 139/2, புரசைவாக்கம் ஹைரோடு, சென்னை.
- 40, காளத்தியப்ப முதலி தெரு, சென்னை.
- 139, சூளை ஹைரோடு, சென்னை.
- 105, திருவொற்றியூர் ஹைரோடு, சென்னை.
- 3/95, பிராட்வே, (பிராட்வே டாக்கீஸுக்கு அடுத்தது) சென்னை.

N. B. உங்கள் தேவைகளுக்கு வேலை நடக்கும் இடங்களிலேயே டெலிவரி ஏற்பாடும் செய்யப்படும்.

M. குப்புசாமி நாயக்கர்

இறக்குமதி & ஏற்றுமதியாளர்கள்

15, செம்புதாஸ் தெரு,

சென்னை-1.

தபால் பெட்டி நெ. 1893
போன்: 21368 & 21369

ஸ்டாக்கிஸ்டுகள்: டாடா / S & L ஜி. ஐ பைப்புகள்: எவரெஸ்ட் அஸ்பெஸ்டாஸ் சிமிண்ட் ரூபிங் (கூரைகளுக்கான) ஷீட்டுகள் & A. C. பைப்புகள் & பிட்டிங்குகள் முதலியன.

தொழில்

இந்த இதழில்

1—8—59

தியாகிகள் தினம் ... 3
சென்னை ராஜ்ய இரும்பு எஃகு உற்பத்தியாளர் சங்க 7வது மகாநாடு ... 6
சுமதியின் சபதம் (தொடர் கதை) (சி. ஜெ. எம்.) ... 17
குடுமியா? கிருப்பா ... 30
கனவு பலிக்குமா! ... 39
நோயும் மருந்தும் அவளே ... 43
நடிகை நந்தினி ... 51
கலைமணம்
சினிமா விமர்சனம் ... 57

கதை, கட்டுரைகளில் வரும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே.

பொடிகளில் சிறந்தது எது?

கிரிஜா நெ. 1. பட்டணம் பொடி

நேதாஜி நெ. 1. பட்டணம் பொடி

சவரன் மார்க் பவுன் கலர் பொடி

ஸ்ரீ ஆண்டாள் ஆபீஸர்

ஸ்பெஷல் நெய் பொடியும் எமது தயாரிப்பே.

ராதா
பவுன்கலர் & ஆபீஸர்
பொடி

RADHA SNUFF

MANUFACTURERS: RADHA & CO., 12.T.H. ROAD. MADRAS-21.

Telegrams: MARIGOLD　　Phone: 31738

K. PERUMAL UDAYAR

Importer, Exporter &
Manufacturers' Representative

Iron and Steel Approved Fabricator
and Approved Scrap dealer

Undertakes to Import goods from foreign countries

வெளிநாட்டு சரக்குகளை, இறக்குமதி செய்து கொடுக்கிறோம்

K. பெருமாள் உடையார்,

55, எடப்பாளையம் தெரு,

சென்னை-3.

'' அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே !''

தொழில்

ஆசிரியர் ; கே. பெருமாள் உடையார்

தொழில் 2	சென்னை, 1—8—'59	இதழ் 7

தியாகிகள் தினம் !

"மக்களுடைய அரசாங்கம் மக்களால் ஏற்படுத்தப்பட்ட அரசாங்கம்—மக்கள் நலனுக்காக இயங்கும் அரசாங்கம்" என்று கூறினர் ஆபிரஹாம் லிங்கன். ஜனநாயகத்தின் அளவுகோலாக மேற்கூறிய இரண்டுவார்த்தைகளைக் கூறி மறைந்தார் அந்த ஒப்பற்ற தலைவர். வெள்ளையர்கள் ஆட்சியின் பிடியிலிருந்து அகன்று, நாம் பூரண சுதந்திரம் அடைந்துவிட்டோம்; பூரிப்படைய வேண்டிய விஷயம் தான்!

இந்த பூரிப்புக்கு வழிவகுத்த உத்தமர்கள்—வெள்ளையர்கள் குண்டுக்கு மார்பை நீட்டி, இரத்தம் சிந்திய தியாகிகள்—விடுதலைத்தாகம் கொண்டு, மனைவி, மக்கள், சொத்து, சுகம் எல்லாம் துறந்து நாட்டின் நலனுக்காக, நற்பணியில் இறங்கிய அந்த நல்லவர்கள்—தன் நலப்பற்றுக்குறைவும் பிறநல நாட்டம் அதிகமுள்ள, நம்நாட்டின் தவப்புதல்வர்கள்—ஆகியவர்கள், இரத்தக்களத்தில் இறங்கி போராட்ட வீரர்களாக மாறிய நாள்தான் ஆகஸ்டு 15 ந் தேதியாகும். விடுதலை உணர்ச்சியை தட்டி நம்மை தலை நிமிர்ந்து நிற்க வழி வகுத்த தினம் த்ான் இந்த ஆகஸ்டு 15.

இந்த தினம்! நாம் வாழ்நாளிலே மறக்க முடியாத தினமாகும்; செக்கிழுத்து சிதைந்து சின்னபின்னமாக்கப்பட்ட

வர்; ஒப்பற்ற தலைவர்; கப்பல் ஓட்டிய வீரர்; வீரர் பரம்பரையிலே உதித்து, வீறு நடை போட நமக்கு வழி வகுத்தவர். உ. சிதம்பரத்தை நாம் மறக்க முடியுமா? அவர் செய்த் தியாகம் நம் மத்தியில் என்றும் ஞாபகச் சின்னமாகப் பதிந்துவிட்டது. அவரை ஞாபகப்படுத்துவதோடு, அவர் கொள்கை, லட்சியங்களை, நாம் பின்பற்றுவோம் என்று சபதம் எடுக்கும் நாள் தான் ஆகஸ்டு 15.

208368

புரட்சி கவிகளை இயற்றி, நம்முடைய தேசிய உணர்ச்சிக்குப் புத்துயிர் அளித்த அமர கவி பாரதியாரை நாம் நம் மனக் கண்முன் நிறுத்துகிறோம்; தன்னுடைய உடலில் கடைசி மூச்சு இருக்கும் வரைக்கும், தேசியக் கொடியைவிட மாட்டேன்; என் உயிர் வேண்டுமானால் பிரியட்டும்; ஆனால் தேசியக் கொடியை என் கையில் இருந்து பிரிக்கவிடமாட்டேன் என்று கூறி தன் உயிரையே, கொடியின் கௌரவத்தைக் காப்பாற்றத் தியாகம் செய்தாரே, அந்தத் தியாகி—திருப்பூர் குமரனை நாம் எட்டிபார்க்கிறோம்: அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை நாம் செய்யத் தயாராக இருக்கிறோம்: இறந்தும் இறவாப் புகழ் பெற்ற அந்த நாட்டு வீரர்களை நாம் வாழ்த்துகிறோம். அவர்கள் வாழ்க!

தரையை செப்பனிட்டு, உழுது அதில் சுதந்தரப் பயிரை நமக்கு வளர்த்துத் தந்தார்கள்: பயிரை வளர்க்கத் தண்ணீர் வேண்டுமல்லவா? தயங்காமல், தங்கள் இரத்தத்தைத் தண்ணீராகக் கொட்டினார்கள்; உரம் வேண்டுமல்லவா? உறுதிகொண்ட தங்கள் உடல்களை, போலீஸ் தடியடிக்கும், துப்பாக்கிக் குண்டுகளுக்கும், பலிகொடுத்து, அவ்வுடல்கள் சின்னாபின்னமாக்கப்பட்டு, அதனால் ஏற்பட்ட சிதைந்த பாகங்களை, உரமாக யிட்டார்கள்; சுதந்திரப் பயிர் வளர்ந்துவிட்டது; அப்பயிரில் விஷக்கிருமிகள் பரவாமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

குதூகலம் அடையவேண்டிய இந்நாளில் கொந்தளிப்பும் ஏற்படுகிறது. கேரளா நிலையை நாம் நினைத்து பார்த்தால், குழப்பமும் கொந்தளிப்பும் பீதியும்தான் ஏற்படுகிறது. அராஜகம் அங்கு அத்து மீறிவிட்டது; சர்வாதிகாரம் தலைவிரித்தாடுகிறது. ஏகாதிபத்திய வாதிகள் காட்டிய வழியை நோக்கி நடைபோடுகிறார் கேரள முதன் மந்திரி ஈ. எம். எஸ். நம்பூதிரிபாடு.

ஸ்ரீ. அல்லா பிச்சை நியமனம்!

★

சென்னை பப்ளிக் சர்வீஸ் கமிஷன் உறுப்பினராக ஸ்ரீ அல்லா பிச்சை அவர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்கள். ஸ்ரீ அல்லாபிச்சை அவர்கள், சென்னை மேல் சட்ட சபை உப தலைவராகப் பணியாற்றி யுள்ளார். நல்ல அனுபவமும், திறமையும் ஒருங்கேப்பெற்ற ஸ்ரீ அல்லாபிச்சை அவர்கள், பப்ளிக் சர்வீஸ் கமிஷன் உறுப்பினராக நன்கு பணியாற்றுவார். "தொழில்" அவரைப் பாராட்டுகிறது.

சுதந்திரத்தேரை நமக்கு செய்து தந்தார்கள் நம் தியாகிகள்; நிறையக் கயிறுகளால் இணைக்கப்பட்டுள்ளது; சுதந்திரத் தேரை பழுது ஏற்படாமல் இழுத்துச்செல்ல வேண்டியது தான் நம்முடைய பொறுப்பு; கயிறுகளில் வித்தியாசம் இருப்பதுபோல், நம்முடையக் கொள்கைகளிலும், வித்தியாசம் இருக்கத்தான் செய்யும்; ஆனால் தேர் ஒன்று தான் என்பதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்; சுதந்திரத் தேருக்கு பழுது வராமல் பார்த்துக்கொள்ள வேண்டியது தான் நம்முடைய பொறுப்பு; சுதந்திரத்திற்கு பங்கம் விளைவித்தால், அதனால் வரக்கூடிய பயங்கர பலன்களை நாம் தான் அறுவடை செய்யவேண்டியதிருக்கும் என்பதை ஸ்ரீ நம்பூதிரிபாடு அறிய வேண்டும். அராஜரீகம் அகற்றப்படவேண்டும், அநீதிக்குச்சாவு மணி அடிக்கவேண்டும். சுதந்திரத்தேர் ஒழுங்காக ஓடுவதற்கு ஒற்றுமை என்ற அச்சாணி அவசியம்.

பண்டிதநேரு அவர்கள் தலைமையின் கீழ், காந்திஜி காட்டிய வழியில் சென்று, நாம், தியாகிகளின் லட்சியங்களை நிறைவேற்றுவோம் என்ற சபதத்தை எடுத்துக்கொள்வோமாக! வாழ்க தியாகிகள்!!

இரும்பு எஃகு உற்பத்தியாளர் சங்க 7வது மகாநாடு

சென்னை ராஜ்ய இரும்பு எஃகு உற்பத்தியாளர்கள் சங்க 7வது மகாநாடு சென்னை தேனம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் நடந்தது. ராஜ்யத்தின் வெவ்வேறு பாகங்களிலிருந்து பிரதிநிதிகள் மகாநாட்டில் பங்கு கொண்டார்கள்.

மகா நாட்டில், ஸ்ரீ P. E. ராகவ செட்டியார் Ex. எம். ஸி. தேசியக் கொடியை ஏற்றி வைத்துப் பேசியதாவது:—

தேசியக் கொடியை ஏற்றி வைக்க எனக்கு இந்த அரிய வாய்ப்பை தந்ததற்காக, வரவேற்பு கமிட்டியாருக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள்-பணக்காரர்கள்-எளியவர்கள்-முதலாளி-தொழிலாளி-என்ற பாகுபாடு இந்தக் கொடிக்குக் கிடையாது: வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது என்று ஒரு சாரார் கூறித் திரிகிறார்கள். தேசியக் கொடியின் கீழ், வடக்கு, தெற்கு என்ற வித்தியாசம் கிடையாது; எல்லோரும் இந்தியர்கள் என்ற ரீதியில், நாம் இக்கொடியின் கீழ் ஒற்றுமையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

சென்னை ராஜ்ய இரும்பு எஃகு உற்பத்தியாளர்கள் சங்க 7-வது மகா நாட்டில், ஸ்ரீ பி. கே. கோவிந்தசாமி அவர்களின் வரவேற்புரை:—

சென்னை ராஜ்ய இரும்பு எஃகுப் பொருள்கள் உற்பத்தியாளர்களின் 7வது மகாநாட்டிற்கு அன்பு கூர்ந்து விஜயஞ் செய்த அனைவருக்கும் அவர் தன்னுடைய மனமார்ந்த வணக்கத்துடன் நல்வரவு கூறினர்.

"டிபக்டிவ், ஸ்கிராப் மற்றும் இறக்குமதி செய்யப்படும் இரும்பு எஃகுப் பொருள்களையும், இரும்பு எஃகு வியாபாரிகள் நேரடியாக விற்பனை செய்யாமல் உபயோகிப்பவர்களாகிய எங்களுக்கே விநியோகிக்கப் பெர்மிட் முறை ஏற்படுத்த வேண்டும்" என்று வரவேற்புரையில் அவர் குறிப்பிட்டிருந்தார். இயந்திர சாதனங்களின் விஸ்தரிப்பினால் நம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகும் என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

மத்திய சர்க்கார் கச்சாப் பொருள்களை அயல் நாடுகளி

ஸ்ரீ பி. ஈ. ராகவ செட்டியார் மகாநாட்டில் தேசீயக்கொடியை ஏற்றி வைக்கும் காட்சி.

விருந்து இறக்குமதி செய்யும் விஷயத்தில் தொழிற்சாலைகளுக்கு விசேஷ சலுகைகள் அளிக்க வேண்டுமென்று அவர் கூறினர். கோட்டா சர்டிபிகேட்களுக்கு கச்சாப்பொருள் பெற ஆண்டுக் கணக்காகிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொண்டதோடு கோட்டா சர்டிபிகேட்டுகளில் வழங்கப்பட்ட அளவுகளுக்கு கச்சாப் பொருள்கள் உடனடியாக கிடைக்க சர்க்கார் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். ஒருமுனை வரி வேண்டாம்; பலமுனை வரி வசூலிக்க வேண்டுமென்று அவர் குறிப்பிட்டிருந்தார்.



மகாநாட்டில் ஸ்ரீ பி. கே. கோவிந்தசாமி
வரவேற்புரை நிகழ்த்துகிறார்.

மகாநாட்டில் தொழில் மந்திரி ஸ்ரீ. ஆர். வெங்கட்ராமன் பேசியதாவது:—

சென்னை ராஜ்ய இரும்பு, எஃகு உற்பத்தியாளர்கள் சங்கம் 7வது மகாநாட்டைக் கூட்டி இருப்பதை நான் வரவேற்கிறேன்; மக்கள் குறைகளை மாநாட்டின் மூலம் எடுத்துக் கூறுவது மிகவும் பொருத்தமானது. குறைகளைப் போக்கவும், குறைகளை அகற்றவும் மாநாடு கூட்டுவது மிகவும் அவசியமாகும். மாநாடு இரண்டு வித காரணங்களுக்காகக் கூட்டப்படுகின்றன. 1. குறைகளை எடுத்துக்கூறுவது 2. குறைகளை அகற்றுவதற்கு. இந்த மாநாடு குறைகளை அகற்றுவதற்காகக் கூட்டப்பட்டுள்ளது.

ஜனநாயக நாட்டில் மக்கள் குறைகளை எப்படி சர்க்கார் தெரிந்துகொள்ள முடியும்? தொழில் துறையிலுள்ள நீங்கள் ஒன்று கூடி, உங்கள் ஏகோபித்த கருத்துக்களை எடுத்துக்கூறினால் சர்க்காருக்கு உங்கள் குறைகள் தெரிய வரும். சர்க்கார் ஆனச்

மகாநாட்டில், தொழில் மந்திரி ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன் பேசிக்கொண்டிருக்கிறார்.

செய்ய தயங்காது. தொழில் அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதுதான் சென்னை ராஜ்ய சர்க்காரின் நோக்கமாகும்.

தொழில்களை இரண்டு விதமாகப்பிரிக்கலாம்:—1. கனரகத் தொழில்கள் 2. சிறு தொழில்கள். இரண்டு தொழில்களையும் வெவ்வேறாகப் பிரிப்பது அவ்வளவு நல்லதல்ல; இரண்டும் ஒன்றுக்கொன்று நன்கு இணைக்கப்பட்டால்தான் நல்லது; இரண்டு தொழில்களும் ஒன்றுக்கொன்று சார்ந்துள்ளது. சிறுதொழில்களை எடுத்துக் கொள்ளுங்கள். கனரகத்தொழில்கள் இல்லாவிடில்சிறு தொழில்கள் தனிப்பட்ட ரீதியில் இயங்க முடியாது. சிறுதொழில்களுக்குவேண்டிய இரும்பு எஃகு சாமான்கள், கனரகத் தொழில் மூலம் தான் உற்பத்தி செய்யமுடியும். ஆகவே கனரகத்தொழில் சிறு தொழில் வளர்ச்சிக்கு ஒருவழியில் உதவியாக இருக்கிறது. இதேமாதிரி, கனரகத்தொழிலை எடுத்துக் கொள்வோம். கனரகத்தொழிற்சாலைக்கு வேண்டிய சிறிய, சில்லறைப்பாகங்கள், சிறு தொழில்கள் மூலம்தான் தயா

ரிக்கப் படுகின்றன. இந்த முறைப்படி பார்த்தால், கனரகத்தொழிலின் வளர்ச்சிக்கு சிறுதொழில், ஒரு வழியில் உதவியாக இருக்கிறது. ஆகவேதான், கனரகத்தொழிலும், சிறுதொழிலும் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட வேண்டுமென்று நான் கூறுகிறேன்; சிறு தொழிலேயும், கனரகத் தொழிலேயும், வெவ்வேருகப்பிரிப்பது, அவ்வளவு நல்லதல்ல.

சர்க்காரை குறை கூறுவதற்கென்றே சில மாநாடுகள் கூட்டப்படுகின்றன. எவ்வளவு ஒழுங்காகவும், திறமையாகவும், நிர்வாகத்தை நடத்திலுைம், எல்லா பிரச்னைகளையும், யாரும் தீர்த்துவிடமுடியாது என்று கூறிக்கொள்ள ஆசைபடுகிறேன். அப்படியானல் பற்ருக்குறையை எப்படி அகற்றுவது; பற்ருக்குறையை அகற்றுவது முக்கியம்; பற்ருக்குறை இருப்பதால், ஒரேயடியாக சர்க்காரைக் குறைகூறிப் பயன் இல்லை. பற்ருக்குறையை ஓரளவு திறமையாக அகற்ருவிடில், நாம் ரொம்பக்கஷ்டப்பட நேரிடும்; சர்க்கார் முடிந்த அள்வு பற்ருக்குறையை அகற்றுகிறது; அகற்றப் பாடு படுகிறது; பற்ருக்குறையை உடனே அகற்றிவிடு, என்று கூறிஞல், அப்படி, நினைத்த உடன், அகற்றிவிடுவது முடியாத காரியமாகும். ஆகவே குறைகளை எடுத்துக்கூறுங்கள் சர்க்கார், கவனித்து ஆவன செய்ய தயங்காது.

இரும்பு எஃகு கோட்டா விஷயத்தை சிறிது பார்ப்போம், சென்னை ராஜ்யசர்க்கார், நம்முடைய ராஜ்யத்திற்கு இரண்டாவது குவார்ட்டருக்கு 1600 டன் இரும்பு, எஃகுக்கு கோட்டா கேட்டிருந்தது: ஆனல் நமக்குக் கிடைத்த கோட்டா 761 டன்தான்; அதே மாதிரி 3வது குவார்ட்டருக்கு நாம் 1600 டன் இரும்பு எஃகுக்கு கோட்டாக் கேட்டிருந்தோம். ஆனல் நமக்குக் கிடைத்ததோ 1236 டன் இரும்பு, எஃக்குக்குத்தான் கோட்டா கிடைத்தது. நாம் கேட்ட அளவு நமக்குக் கிடைக்கவில்லை; கிடைத்த கோட்டாவின்படி நமக்கு கிடைக்க வேண்டிய இரும்பு எஃகும் சரிவர கிடைக்கவில்லை.

5 டன்னுக்கு மேலே, கோட்டா முறைபடியில்லாமல், பெர்மிட் முறைபடி கொடுப்பது நல்லது என்று ஒரு சாரார் கூறுகின்றனர். தற்போதைய சூழ்நிலையில், கோட்டா முறைபடி கொடுப்பதுதான் நல்லது. நமக்குக் கிடைத்த கோட்டாக்களின்படி 3 மாதத்திற்குள் அக்கோட்டா சாமான்கள் கிடைக்க வேண்டும். கோட்டாபடி, நமக்குக் கிடைக்கவேண்டிய சாமான்கள் கிடைக்க ராஜ்ய சர்க்கார் ஆவன செய்யும். விவசாய கோட்டா, பேப்ரிகேட்டர்கள் கோட்டாவைவிட அதிகம் கொடுக்கப்படுகிறது என்ற ஒரு கேள்வி எழுப்பப்படுகிறது. விவசாயிகள் கோட்டா, சிறிது அதிகமாகவே கொடுக்கப்பட்டுள்ளது. காரணம்? விவ்சாயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்பதுதான்; முதல் பிரச்னை உணவு பிரச்னையாகும்; சாப்

INVEST

All you can

The.Bank accepts FIXED DEPOSITS for 61 months and above, at the rate of 5 per cent per annum. Interest is payable monthly. The Bank also accepts Recurring Deposits for 36 months.

For particulars please consult the Secretary,

M. C. C. H. M. Bank,

14, RITHERDON ROAD.

VEPERY : MADRAS-7.

பிட்டால்தானே வேலை செய்ய முடியும். ஆகவேதான், விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றுதான், விவசாயக்கோட்டா, பேப்ரி கேட்டர் கோட்டாவை விட அதிகமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. வேறு ஒருவித காரணமும் கிடையாது.

சென்னை ராஜ்யத்தில் மொத்தம் 500 பேப்ரிகேட்டர்கள் இருக்கிறார்கள். கொடுக்கும் கோட்டாப் போதாது என்று கூறுகிறார்கள். மற்றைய ராஜ்யங்களை ஒப்பிட்டு சென்னை ராஜ்யத்திலுள்ள, பேப்ரிகேட்டர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கோட்டா, குறைவு என்று கூறப்படுகிறது: நான் கூறிக்கொள்ள ஆசைபடுகிறேன். ஏன் சென்னை ராஜ்ய பேப்ரிகேட்டர்களுக்குக் குறைவாகக் கோட்டா கொடுக்கப்படுகிறது? மற்றைய ராஜ்யங்களை விட, சென்னை ராஜ்யத்தில் பேப்ரிகேட்டர்களின் எண்ணிக்கை அதிகம்; மற்ற ராஜ்யங்களில் பேப்ரிகேட்டர்களின் எண்ணிக்கைக் குறைவு. அங்கு பேப்ரிகேட்டர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், கோட்டா அதிகம் கொடுக்கப்படுகிறது. நம்முடைய ராஜ்யத்தில் பேப்ரிகேட்டர்கள் அதிகமிருப்பதால், கோட்டா குறைந்த அளவு கொடுக்கப்படுகிறது.

விற்பனைவரியை எடுத்துக் கொள்வோம்; பலமுனை வரி வேண்டாம் ஒருமுனைவரிதான் வேண்டும் என்று ஒரு பெரிய கூக்குரல் ஏற்பட்டது. ஆனால் ஒருமுனைவரி விற்பனைக்கு லாயக்கில்லை. பலமுனை வரிதான் வேண்டுமென்று நான் கூறினேன்; இந்த பிரச்னை நிபுணர்கள் ஆலோசனைக்கு விடப்பட்டது. நிபுணர்கள் சிபார்சின்படி ஒருமுனை வரியை ஒப்புக்கொண்டேன். இப்போது அதற்கும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. பலமுனை வரி விதிக்கப்பட்டால் ரூ 10,000 வரை விதி விலக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒருமுனைவரி, ஒரு ரூபாய் விற்பனையானாலும், அந்த ஒரு ரூபாய் மீதும் வரி விதிக்கப்படும். எல்லாப் பண்டங்கள்மீதும், ஒருமுனை வரி வசூலிக்கப்படும். சர்க்கார் இந்த வரியை நீக்க வேண்டுமென்றால் ஆவன செய்யும். உங்களுக்கு கூட்டுறவு சங்கம் அமைக்க

வேண்டுமென்று நான் முன்பே கூறியுள்ளேன். சங்கம் அமைக்க நீங்கள் முன்வந்திருப்பதை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன் என்றும், பேப்ரிகேட்டர் குறைகளைக் கவனித்து ஆவனசர்க்கார் செய்யும் என்றும் தொழில் மந்திரி ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன் அவர்கள் கூறி முடித்தார்.

சென்னை ராஜ்ய இரும்பு எஃகு உற்பத்தியாளர்கள் சங்க 7வது மகாநாட்டுத்தலைவர் ஸ்ரீ. என் ராமகிருஷ்ண அய்யர் எம். ஏ. பி. எல். எம். பியின் தலைமை உரை:—

இரும்பு எஃகு தொழில் வளர்ச்சி அடைய உற்பத்தியாளர்களிடம் ஒற்றுமை நிலவ வேண்டும்; ஒற்றுமை இல்லாவிடில் அந்தத் தொழிலும் வளர்ச்சி அடையாது, கஷ்டங்கள் ஏற்படும்போது, இப்படிப் பட்டமாநாடு கூடி, சர்க்காருக்கு உங்கள் குறைகளை தெரிவிக்கிறீர்கள். சர்க்கார் தலையிட்டு ஆவனசெய்ய முன்வருகிறது; கோட்டா கிடைப்பதில் கஷ்டம் இருப்பதாகக் கூறினீர்கள். கோட்டா கிடைப்பதில் ஏற்படும் கஷ்டத்தைப் போக்க தொழில் மந்திரி ஸ்ரீ. ஆர். வெங்கட்ராமன் ஆவன செய்வார் என்று எதிர்பாக்கிறேன். சென்னை ராஜ்யத்தில் சிறுதொழில் வளர்ச்சி அடைய நல்லவாய்ப்பு இருக்கிறது. அறிவும், ஆற்றலும் இங்கு நிறைய உண்டு. சிறுதொழில் நல்ல முறையில் இங்கு வளர்ச்சி அடையவேண்டும். கஷ்டம் வரும்போதுதான் ஒற்றுமைக்கு அவசியம் ஏற்படுகிறது; சிறுதொழிலுக்கு அதிகாரிகளின் ஒத்துழைப்பு எப்போதும் இருக்குமென்று நம்புகிறேன்.

"அரசியலின் வரலாறு"

ஸ்ரீ. சி. ஜெ. மார்த்தாண்டன் பி. ஏ. "அரசியலின் வரலாறு" என்ற தலைப்பின்கீழ் அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து எழுதுகிறார்.) பூர்வீக காலத்திலிருந்து இன்றைய காலம் வரையிலுள்ள அரசியல் வளர்ச்சியைப்பற்றி அவர் எழுதுவார்.

சென்னை ராஜ்ய இரும்பு எஃகு உற்பத்தியாளர்கள் சங்க 7வது மாநாட்டில் "தொழில் ஆசிரியர்" ஸ்ரீ. கே. பெருமாள் உடையார் மகாத்மா காந்திஜியின் திருஉருவப்படத்தைத்திறந்து வைத்துப் பேசியதாவது:—

மகாத்மா காந்திஜியின் திருஉருவப்படத்தைத் திறந்து வைத்துப்பேச எனக்கு வாய்ப்பு கொடுத்ததற்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். சிக்கனமாக, ஆடம்பரமில்லாத வாழக்கை நடத்தினார் நம் தேசப்பிதா மகாத்மா காந்தி. அவர் கொள்கையை, நாம், மகாநாடு நடத்தும் முறையே பரைசாற்றுகிறது. எந்தவித ஆடம்பரமில்லாமலும், சிக்கனமான முறையில் மாநாட்டைக் கூட்டி இருக்கிறார்கள் வரவேற்பு கமிட்டியார்; மகாத்

மகாநாட்டில் "தொழில்" ஆசிரியர் ஸ்ரீ கே. பெருமாள் உடையார் உரை நிகழ்த்துகிறார்.

மா காந்திஜியின் கொள்கை அப்படியேப் பின்பற்றப்படுகிறது. இந்த மாநாட்டை நல்ல முறையில் கூட்டித்தந்த வரவேற்பு கமிட்டியாருக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். நம்தேசப் பிதா காந்திஜியின் படமும் அவருடைய கொள்கைகளைப் பின்பற்றும் நம்முடைய ராஜ்ய முதன் மந்திரி ஸ்ரீ. கே. காமராஜ் படமும், மாநாட்டில் திறக்க இருக்கிறது. மகாத்மா காந்திஜி என்ன கூறினார்? "சுய தேவையை பூர்த்தி செய்யவேண்டும்; நாமே உற்பத்திசெய்து, நாமே உபயோகிக்க வேண்டும்" என்று அம்மகான் கூறினார். அவர் கூறியதையே நான் கூற ஆசைப்படுகிறேன். சென்னை ராஜ்ய இரும்பு எஃகு உற்பத்தியாளர்களுக்குத் தேவையான கோட்டாக் கிடைப்பதில்லை. கோட்டாக் கிடைத்தாலும் கூட கோட்டாவிற்குரிய இரும்பு எஃகு அவ்வப்போது கிடைப்பதில்லை. காலதாமதம் ஏற்படுகிறது. பேப்ரிக்கேட்டர்களுக்கும் இரும்பு எஃகு சாமான்களில் பற்றுக்குறை ஏற்படுவதால், தொழிலில் மந்தம் ஏற்

படுகிறது. சுயதேவையை பூர்த்தி செய்ய வேண்டும் என்ருல் பற்ருக்குறை அகற்றப்பட வேண்டும்; பற்ருக்குறை அகற்றப்பட்டால், உற்பத்தி அதிகரிக்கும். உற்பத்தி அதிகரித்தால் சாமான்கள் விலை குறையும்: பொதுமக்கள், பலனை அனுபவிப்பார்கள். இப்படியாகப் படிப்படியாக சுயதேவையை பூர்த்தி செய்ய முடியும். மகாத்மா காந்திஜி கூறியவாறு, நாமே உற்பத்தி செய்து, நாமே உபயோகிக்க முடியும்; சுயதேவைபூர்த்திசெய்ய முடியும்.

அடுத்தபடியாக காந்திஜி, கூட்டுறவு, கட்டுப்பாடு ஒற்றுமை அவசிய மென்ருர் இதே கருத்தைத்தான் நமது சங்கத்தை 1956ம் ஆண்டு திறந்து வைத்த நமது முதன் மந்திரி ஸ்ரீ கே. காமராஜ் வற்புறுத்தினர். இங்குக்கூடியிருக்கும் பேப்ரிகேட்டர்கள் பெரும் முதலாளிகளல்ல, பசிக்குசாதம் வேண்டும்—உழைப்புக்கு ஊதியம் வேண்டும் என்று கூறக் கூடியவர்கள்தான், இங்குக் கூடி இருக்கும் பேப்ரிகேட்டர்கள். ஒன்றிரண்டு பேர் குட்டி முதலாளிகளாக; இருக்கலாம்; ஆடம்பரவாழ்க்கை வாழத் தெரியாதவர்கள்; சிக்கன வாழ்க்கை நடத்துபவர்கள்; இந்த முறையில் உண்மையான காந்திஜியின் கொள்கைகளை கடைபிடிப்பவர்கள் யார்? என்ருல் அவர்கள் தான் இங்குக் கூடி இருக்கும் பேப்ரிகேட்டர்கள்.

கூட்டத்தை பெரிய அளவில் கூட்டிவிட்டாலோ அல்லது கைதட்டல் வாங்கிவிட்டாலோ மகாநாடு ஆகிவிடாது; மனிதத்தன்மை தான் முக்கியம்; மனிதன் மனிதத்தன்மையை இழந்து விட்டால் அவன் காட்டுமிராண்டியாகி விடுவான்; மாநாட்டுத்தலைவராக வீற்றிருப்பவர், ஸ்ரீ. என். இராமகிருஷ்ண அய்யர் எம். ஏ. பி. எல். எம். பி.; அவர் நன்கு படித்திருக்கிருர் என்பதற்காகவோ, அல்லது பார்லிமெண்ட் மெம்பர் என்பதற்காகவோ மகாநாட்டிற்குத் தலைமை தாங்க அழைக்கப்படவில்லை. அவர் மகாத்மா காந்தியின் கொள்கையைப்பின்பற்றுபவர் அவரது உள்ளன்பும் ஆதரவும் நமக்கு என்றும் வேண்டும் என்பதற்காக, அவர் அழைக்கப்பட்டுள்ளார்.

"என் கடன் பணி செய்து கிடைப்பதே" என்ற குறிக்கோளை நடைமுறையில் கடைபிடிப்பவர்கள் பேப்ரிகேட்டர்கள் என்று நான் கூறிக்கொள்ள ஆசைபடுகிறேன்; பற்ருக்குறையால் எவ்வளவு அளவு பாதிக்கப்பட்டபோதிலும், மனம் தளராது, மக்களுக்கு வேண்டிய சாமான்களை உற்பத்தி செய்கிருர்கள்; பொதுப்பணியை அவர்கள் ஒருபோதும்மறந்தது கிடையாது. இருந்தபோதிலும், ஒன்று தெரிய வேண்டும். நாம் பணிசெய்ய தயாராக இருக்கிரும். பற்ருக்குறையை நீக்கிவிட்டால், எங்கள் பணி நடந்துகொண்டே இருக்கும் "இடைப்பதை வைத்து திருப்தி செய்" என்று மகாத்மா காந்திஜி கூற்றுக்கேற்ப,

இரும்பு எஃகு உற்பத்தியாளர்களாகிய நாங்கள், பற்றுக்குறை இருந்த போதிலும், எங்களுக்குக் கிடைக்கும் பொருள்களை வைத்து, உற்பத்தி செய்து மக்களுக்குப் பணியாற்றி வருகிறோம்.

புதியவர்கள் வரக்கூடாது என்றும் நாங்கள் கூறவில்லை. தாராளமாக வரட்டும்: எங்களுடைய ஒத்துழைப்பு எப்போதும் அவர்களுக்கு உண்டு.

எங்களிடம் கட்சி மனப்பான்மை கிடையாது; அபிப்பிராயப் பேதத்திற்கு அணுவளவும் இடம் கொடுக்கமாட்டோம். ஒரே ஒரு வேண்டுகோள்! இங்கு நிறைவேற்ற இருக்கும் தீர்மானங்களை நடை முறைக்குக் கொண்டு வந்தால் அதுவே போதும். பற்றுக் குறை சீக்கிரத்தில் அகற்றவேண்டும்; நம்முடைய ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும். காலதாமதம் ஏற்பட்டால் தொழில் மிகவும் பாதிக்கும்; நமக்கு வேண்டிய மூலப்பொருட்கள் அவ்வப் போது கிடைக்க வழி வகுத்தால், பற்றுக்குறை தானே பறந்துபோய்விடும். காந்திஜியின் கனவு நனவு ஆக்கப்படும். நம்முடைய தொழில் ஜாயின்ட் டைரக்டர் ஸ்ரீ டி. ஆர். கிருஷ்ணசாமி அவர்கள் நம்முடையக் குறைகளை அகற்றுவார் என்று எனக்கு நம்பிக்கை உண்டு. கோட்டா சர்ட்டிபிகேட் அவ்வப்போது கிடைப்பதில்லை; கிடைத்தால் கூட, கோட்டா சர்டிபிகேட்டின்படி சரக்குகள் கிடைப்பதில்லை; இந்தக்குறைகளை அகற்றிவிட்டால் நிச்சயமாக, காந்திஜியின் கனவு நனவு ஆக்கப்பட்டு, நம்முடைய சுயதேவையை படிப்படியாகப் பூர்த்தி செய்து விட முடியும் நம்முடைய ராஜ்ய தொழில் மந்திரி ஸ்ரீ. ஆர். வெங்கட்ராமன் அவர்களும், தொழில் இலாக்கா டைரக்டர் ஸ்ரீ டி. ஆர். கிருஷ்ணசாமி அவர்களும், நமக்கு வேண்டியவைகளை அவ்வப் போது செய்வார்கள் என்று கூறிக்கொண்டு எல்லா மக்களிடமும் மகாத்மா காந்திஜியின் அன்பும், ஆசியும் என்றென்றும் இருக்கவேண்டுமென்று ஆண்டவனை பிரார்த்திக்துக் கொள்கிறேன்.

சென்னை ராஜ்ய இரும்பு எஃகு உற்யாளர்கள் சங்க 7வது மகாநாட்டில் முதன் மந்திரி ஸ்ரீ. கே. காமராஜ் உருவப்படத்தை ஸ்ரீ, ஆர். எஸ். குமாரசாமி திறந்து வைத்தார். அவர் பேசியதாவது:—

பேப்ரிகேட்டர்கள் ஒழுங்காகவும் கட்டுப்பாடாகவும் நடந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். தொழில் இலாகா டைரக்டர் ஆபிஸில் அனாவசியமான கால தாமதமும், பாரபட்சமும் இருப்பதை அவர் கண்டித்துப் பேசினார்.

சென்னை ராஜ்ய இரும்பு எஃகு உற்பத்தி யாளர்கள் சங்க 7வது மகாநாட்டில் தொழல் இலாக்காகூட்டு டைரக்டர் ஸ்ரீ. டி. ஆர். கிருஷ்ணசாமி பேசியதாவது:—

இரும்பு எஃகு உற்பத்தியாளர்களுக்கு சர்க்கார் ஆவன செய்துகொண்டிருக்கிறது. மத்திய சர்க்காரிடம், சென்னை

ராஜ்ய சர்க்கார், கோட்டா அதிக அளவுகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறது. பேப்ரிகேட்டர் குறைகளை தன்னால் இயன்ற அளவு அகற்றப் பாடுபடுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிறகு திருச்சி ஜனாப் பி. எச். மகம்மது நஸுருதின் (பொதுக்காரியதரிசி) கோவை. டி. குழந்தைசாமி, திருச்செங்கோடு டி. எம். சுப்பிரமணிய ஆச்சாரி மதுரை எஸ். ஆர். கிருஷ்ணமூர்த்தி, திண்டுக்கல் எம். கருப்பண்ணன், சென்னை கே. ராதாகிருஷ்ணன் எம். கன்னியப்பன், கும்பகோணம் எம். கந்தசாமி கோ. வெங்கட்ராமன் ஆகியோர்கள் பேசினார்கள்.

மகா நாட்டில் கீழ் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின. ஸ்ரீ கே. பெருமாள் உடையாருக்கு பாராட்டு.

1. சென்னை ராஜ்ய இரும்பு, எஃகு உற்பத்தியாளர்கள் சங்கத்திற்கு 4 ஆண்டுகளாக காரியதரிசியாகவும், 4 ஆண்டுகளாகத்தலைவராகவும் பணியாற்றிய "தொழில்" ஆசிரியர் ஸ்ரீ கே. பெருமாள் உடையாரை மகாநாடு பாராட்டுகிறது.

2. சென்னை ராஜ்ய இரும்பு எஃகு சங்கத்துக்கு கூட்டுறவு சொஸைடி லிமிடெட் அமைப்பதென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

3. சென்னை ராஜ்யத்தில் இருக்கும் ஒவ்வொரு அப்ரூவ்ட் பப்ரிகேட்டருக்கு நிர்ணயித்திருக்கும் கோட்டா அளவை அவரவர்களுக்கேற்றவாறு உயர்த்தி கொடுக்க வேண்டுமென்று இம்மகாநாடு சென்னை சர்க்காரைக் கேட்டுக்கொண்டது.

4. சென்னை சர்க்காரில் இருக்கும் ஸ்டீல் ஆலோசனை போர்டில் சென்னை ராஜ்ய பேப்ரிகேட்டர் சங்கத்திற்கு ஏற்கனவே கொடுத்தபடியே 2 பிரதிநிதித்துவம் கொடுக்கும்படி இம்மகாநாடு கேட்டுக்கொண்டது.

5. D. I. C. அதிகாரிகள் ஒவ்வொரு குவார்ட்டருக்குக் குறிப்பிட்டிருக்கும் கோட்டாவை ஸ்டண்டர்ட் சரக்குகளாகக்கொடுக்க வேண்டுமென்றும், டிபெக்டிவ் அண்ட் ஸ்கிரப் இவைகளை பிரத்யோகமாகக் கொடுக்கும்படி, D. I. C. அதிகாரிகளையும், சென்னை சர்க்காரையும் இம்மகாநாடு கேட்டுக்கொண்டது.

6. சிறுதொழில்களுக்கு ஒரு முனை வரியை மாற்றி பலமுனை வரிவிதிக்கவேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொண்டது.

வந்தனோபசாரம் கூற கூட்டம் முடிவடைந்தது.

இன்னொருவனின் அனுமதியின்றி அவனை ஆள எந்த மனிதனும் தகுதியுடையவன் அல்ல.

—லிங்கன்.

சுமதியின் சபதம்

சி.ஜெ. மார்த்தாண்டம் பி.ஏ.

ஓடிய கதை

மைலாப்பூரில் சுமதி ஒரு பிரபல வக்கீல்; கண்ணப்ப முதலியாரின் ஒரே மகள்தான் சுமதி; கச்சேரி ரோட்டிலிருக்கும் மஞ்சள்நிறமான அவளுடைய பங்களாவிற்கு எதிர்பாராமல் ராஜரத்தினம் வந்து சேர்ந்தான். சுமதியும் காதலர்கள்; வந்தவன் 5 நாட்கள்தான் சுமதியின் பங்களாவில் தங்கினான். கண்ணப்ப முதலியாரின் போக்கு பிடிக்காததால், பங்களாவை விட்டு வெளியேறி விட்டான். சுமதியின் சொந்த ஊர்ஆறுமுகநேரியாகும்; ராஜரத்தினம் அவளிடம் கூடக்கூறாமல் பங்களாவை விட்டு வெளி ஏறியதால், அவள் அவனை நினைத்து சித்திரவதையாக்கப்பட்டாள்; இரண்டு பேருக்குமிடையே ஏற்பட்டக் காதல் பிரிக்க முடியாதது; 8 ஆண்டுகளுக்கு முன் ஆறுமுகநேரியில் நடந்த சம்பவங்களை ஒன்றன்பின் ஒன்றாக நினைத்துக் கொண்டிருந்தான்.

ஆறுமுக நேரியில், ராஜாதெருவில், இரண்டுவீடுகள் ஒன்றுபோல் அமைக்கப் பட்டிருந்தது. ஒரு வீட்டில் கோவிந்தசாமி நாயக்கரும், மறு வீட்டில் கஜபதி நாயக்கரும் வசித்து வந்தார்; இருவரும் சகோதரர்களாவார்கள்; கோவிந்தசாமி நாயக்கருக்கு இரண்டு பிள்ளைகள்; மூத்த பிள்ளைதான் ராஜரத்தினம்; இளையவன் சத்தியவேல். லட்சுமி அம்மாள் கோவிந்தசாமி நாயக்கரின் மனைவி. கஜபதி நாயக்கருக்குக் கமலா என்று ஒரு மகள் உண்டு. தெருவின் தெற்குக் கோடியில்தான் கண்ணப்ப முதலியார் வசித்து வந்தார். எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்கு, சுமதியும், ராஜரத்தினமும் அப்போது ஆயத்தப் படுத்திக் கொண்டிருந்தார்கள்; இளநீர் திருடினான் பாண்டியன். கமலா அத்திருட்டைக் கண்டுபிடித்து போலிசுக்கு தெரியப் படுத்தி விட்டாள்; போலிசுக்கு பயந்து பீதியோடு, ராஜரத்தினம் அறைக்குள் ஓடிவந்தான் பாண்டியன்; பாண்டியன் தேங்காய் திருடியதை கமலா போலிஸுக்குத் தெரியப் படுத்தியதும், போலிஸ் காரர்கள் பாண்டியனைக் கைதுசெய்ய வந்துவிட்டார்கள். பாண்டியன் தன்னை தப்பித்துக் கொள்ள ராஜரத்தினம் உதவியை நாடினான். வீட்டின் முன் பெரிய கூட்டம் கூடிவிட்டது; வீட்டிலிருந்த கஜபதி நாயக்கர், கோபத்

தோடு, ஏட்டு கிருஷ்ணசாமியிடம் ஓடிவந்தார்.

---

7. இரத்த வெள்ளத்தில் கஜபதி நாயக்கர்

கஜபதி நாயக்கர் கண்கள் கோபக்கனலைக் கக்கின; மீசை துடித்தது; வீட்டிலிருந்து ஓடிவந்த நாயக்கர், ஏட்டு கிருஷ்ணசாமியிடம் "ஸார், இந்தப் பயல் பாண்டியன் திருடுவதேத் தொழிலாக வைத்துள்ளான்; கமலாவிடம் கன்னுபின்னு என்று என்ன வெல்லாமோப் பேசி இருக்கிறான். என்தோப்பில் போன திருட்டுக்குக் கணக்கே இல்லை...... ம்......எல்லாம் இந்த பாண்டியன்தான் காரணம் நீங்கள் தயவு செய்து அவனைக் கைது செய்யுங்கள்" என்றார் பரபரப்புடன்.

"நான், திருடல்ல...லட்சுமி அம்மாள்தான் தேங்காய் வெட்டி வரச்சொன்னது. நாயக்கர் வாயில், வந்தபடி பேசுகிறார். தோப்பை அப்படியே விழுங்கி விடலாம் என்று பார்க்கிறார்"..."என்றான், பாண்டியன் மாடியில் நின்றவாறு.

"யார் தோப்புடா, உங்கப்பன் தோப்பா?"... நாயக்கருக்கு கொதிப்பு ஏற்பட்டது.

இதற்குள் ராஜரத்தினம் முந்திக்கொண்டான். "பெரியப்பா, ஏதோ, தோப்பை நீங்கள் அனுபவிக்கிறீர்கள்... சரி, ஆனால் தோப்பு உங்களுக்கு மட்டும்தான் சார்ந்தது என்று கூறுகிறீர்களாமே?... அது எப்படி? கொஞ்சம் சொல்லுங்களேன். எல்லேருக்கும் தெரியவேண்டாம்" என்றான் ராஜரத்தினம் சிறிது கடுகடுப்பான குலிரல். அவனுடைய பேச்சில் நக்கலும், இண்டலும் கலந்திருந்தது. ராஜரத்தினம் இப்படி பேசுவதற்குக்காரணம் இருந்தது ஏற்கனவே ஒண்ணுக்கு இரண்டாகச் சொல்லி, ராஜரத்தினத்திற்கு கஜபதி நாயக்கர் மேல் ஒரு பெரிய வெறுப்பை உண்டு பண்ணிவைத்திருந்தான் வேலு. அதே நேரத்தில் கஜபதி நாயக்கருக்கும், தம்பி மீது பகையை மூட்டி வைத்திருந்தான்

வார்த்தைகள் வளர்ந்து கொண்டு போனதை, ஏட்டு கிருஷ்ணசாமி பார்த்துக்கொண்டு, மனம் சகியாமல் "ஏய் 824, பாண்டியனைக் கைது செய், எல்லாம் கோர்ட்டில் பேசிக் கொள்ளலாம். திருடியதாகக் கமலா குற்றம் சாட்டியுள்ளாள். எங்களுக்கு அது போதும்" என்றார் கிருஷ்ணசாமி சிறிது கோபத்துடன்.

பாண்டியன் துடி துடித்துப் போய்விட்டான். "இந்தாங்க, கொஞ்சம் மனம் இறங்குங்கள். உங்க, அம்மா வெட்டச் சொன்னதால் தான் நான் தேங்காய் வெட்டினேன். ஏதோ என்மீது அபாண்டமான பழி சுமத்தப்



படுகிறதே, ஐயோ நான் ஒரு பாவமும் அறியேன். நீங்கள் சொல்லுவதைத்தானே நான் செய்கிறேன்...கொஞ்சம்... போலிஸ்காரரிடம் சொல்லுங்க..." என்று ராஜரத்தினம் காலில் விழுந்து அழாக் குறையாகக் கெஞ்சினான் பாண்டியன்.

போலிஸ்காரர்கள் வீட்டின் முன் வந்ததும் லட்சுமி அம்மாள் வீட்டின் முன் நின்றுகொண்டு நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தாள். லட்சுமி அம்மாளுக்கு ஒன்றுமே ஓடவில்லை; காலும் ஓடவில்லை, கையும் ஓடவில்லை; வாய் உலர்ந்து விட்டது. அந்தம்மா, ராஜரத்தினத்தையும், சுமதியையும் பார்த்த வண்ணமாக, கமலாவின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தாள். அவள் மனம் குழம்பி இருந்தது. "தேங்காய்தான் வெட்டிச் சொல்லவில்லை. பின் ஏன்? பாண்டியன் தன் தலை மீது அந்தப் பழியை போடுகிறான்" என்று நினைத்ததும் அந்தம்மாவுக்கு ஒன்றும் ஓடவில்லை. "இருந்தாலும் ஒன்றுமே திடீரென்று கூறுவிடக் கூடாது இதில் ஏதோ சதித் திட்டம் இருக்கிறது" என்பது மட்டும் அவளுக்கு வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது. காந்தாமட்டும் எதையோ யோசித்தவண்ணமாக நின்றுகொண்டிருந்தாள். அவள்பக்கத்தில் வேலு நின்றுகொண்டு 'திருதிரு'வென்று விழித்துக்கொண்டிருந்தான். வேலு எங்கேயோ, எதையோப்பற்றி யோசித்துக் கொண்டிருப்பதுபோல் பாவனை செய்தாலும், அவனுடையக் கண்கள் அடிக்கடிக் காந்தாவை நோக்கிக் கொண்டிருந்தன. காந்தாவின் பார்வையும் அடிக்கடி வேலுவின் மேல் விழுந்து கொண்டிருந்தது. காந்தா வேலுவை பார்க்கும் போது, அவள் முகத்தில் பயத்தின் சாயல் தெரிந்தது. அவளுடைய பார்வையும் எதையோச் செய்த குற்றவாளிபோல் அவனைக்காட்டியது. காந்தா, தான் நிற்கு மிடத்தை விட்டு சிறிது அகன்று வேறு இடம் சென்றால், வேலுவும் அவள் பக்கத்தில் சென்று நின்று கொள்வான். குற்றவாளி ஒருவனை போலிஸ் பின் தொடர்வதுபோல், காந்தாவை வேலுப் பின் தொடர்ந்தான்.

"காந்தாவிடம் ஏதே ஒரு இரகசியம் இருக்கிறது. இரகசியத்தை வெளியேச் சொல்லி விடக்கூடாது. என்று தான வேலு, அவளைப் பின்தொடர்கிறான்" என்பதை, அவர்கள் போக்கிலிருந்து சுமதி மாடியில் நின்றவாறு யூகித்துக் கொண்

டாள். சுமதியின் பார்வை மட்டும் சுற்றிசுற்றிவந்தது. அவள் பார்வை கலங்கரை விளக்கு மாதிரி நாலாபக்கமும் சுற்றி வந்துகொண்டிருந்தது. அவள் ஒவ்வொருவர் முகத்தில் காணப்பட்ட குறிப்புகளை நன்கு கவனித்தாள்.

இது இப்படி இருக்கும் போது,

824 ம் நம்பர் போலிஸ், மாடிக்கு பாண்டியனைக் கைது செய்ய விரைந்து சென்றார்;

"பாண்டியனை விட்டு..." என்று ராஜரத்தினம் போலீஸ் காரரிடம், பேச்சை ஆரம்பித்த போது ராஜரத்தினம் தனியாக அழைத்துச் சென்றாள் சுமதி,

பாண்டியனை விட்டு விடுங்கள் என்று கேட்கத்தான் ராஜ ரத்தினம் வாயைத்திறந்தது.

"நீங்கள் நினைப்பது தவறு. பாண்டியன் அசல் அயோக்கி யன், அவன் கம்பி எண்ணட் டும் பிறகு எல்லாவற்றையும் விளக்கிக் கூறுகிறேன்" என்றாள் சுமதி. அவ்ள் பேச்சில் சிறிது தயக்கம் இருந்தது.

ராஜரத்தினத்துக்குப்பாண்டிய னைக் கைது செய்யப் பார்த்துக் கொண்டிருக்க முடியாவிட்டிலும், சுமதியின் வார்த்தைக்கு செவி சாய்த்தான். பாண்டியன், கை யில் விலங்கிடப்பட்டுத் தெரு வழியாக, போலீஸ்காரர்கள் புடைசூழ்,ஸ்டேசனுக்கு அழைத்து செல்லப்பட்டான். அவன்

கண்களில் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது; ராஜா தெரிவிலுள்ள வீடுகளில் பெண்கள் நின்று கொண்டு அவனைப் பார்த்தபோது, அவன் மனம் பட்டபாட்டை வார்த்தைகளால் வருணிக்கமுடியாது துடித்தான்; துவண்டான்; முகத்தை விலங்கிடப் பட்ட இரண்டு கைகளால் மூடிக் கொண்டான்.

கஜபதி நாயக்கருக்கு ராஜரத்தினம் பேசிய வார்த்தைகள் உள்ளக்கொதிப்பை எழுப்பியது; "அப்படியே ராஜரத்தினத்தைக் கொன்று விடலாமா?" என்றது அவர் இறுமாப்பான உள்ளம். பாண்டியன் போலிஸ் வசம் ஒப்படைக்கப்படவேண்டும். அதற்குப்பிறகு எல்லாம் பார்த்துக் கொள்ளலாம் என்று அமைதியாக இருந்து விட்டார்: பாண்டியன் போலிஸ் ஸ்டேசனுக்கு கொண்டு போகப்பட்டப் பிறகு சிறிது நேரம் அமைதி நிலவியது. நாயக்கர் முகம் கடு கடு என்று கோபத்தைக் கக்கிக் கொண்டிருந்தது. அவர் பேச ஆரம்பித்தார்.

"இந்தாப்பா, நான் சொல்வதைக் கேள். தோப்பு மேலே உள்ள ஆசையை விட்டுவிடு ஆமாம், என் உயிர் போனாலும் தோப்பை நீ பெறமுடியாது. அந்த மனக் கோட்டை கட்டுவதைவிட்டுவிடு. உங்கப்பா இருக்கான் பாரு...கோவிந்தசாமி...அவனுக்கு நான் எவ்வளவோ பணம்செலவு செய்துள்ளேன். அது எல்லாம், உங்கம்மா...லட்சுமி அம்மாளிடம் கேளு தெரியும்.

வீணாக உடம்பைப் அலட்டிக் கிடாதே. வாய் வீணத்தனமாக அங்கு இங்கு பேசிவது மாதிரி என்னிடம் பேசாதே...சீரழிந்து போவாய் ஜாக்கிரதை" என்று உறுமினார் நாயக்கர்.

ராஜரத்தினம் கோபம் கட்டுக் கடங்காமல் போய்விட்டது.

"வீணத்தனமாக நான் பேசுகிறேனா? அல்லது நீ பேசுகிறாயா? வீணப் பயல் நீ! சொத்தை ஏமாற்றி வாயில்போட நீ செய்யும் சதி எனக்குத் தெரியாதோ?" என்று மரியாதையில்லாமல் பேச ஆரம்பித்து விட்டான் ராஜரத்தினம். இதை கேட்டமாத்திரத்தில் கஜபதி நாயக்கர், கோபத்துடன் மாடிக்கு ராஜரத்தினத்தை நோக்கி விரைந்தார்.

"ஐயய்யோ, எல்லாம் போச்சி...டேய்,...சத்தியவேல் இந்தாபாரு பெரியப்பா கோபத்தோடு, வேகமாக அண்ணனிடம் ஓடுகிறார்...போய் பார் ..." என்று சத்தியவேலைக் கூப்பிட்டாள் லட்சுமி அம்மாள்

எல்லாவற்றையும் கேட்டு வீட்டினுள் இருந்த சத்தியவேல், அம்மாவின் குரல்கேட்டதும் பெரியப்ப கஜபதி நாயக்கர், ராஜரத்தினத்தை அடிக்கத்தான் ஓடுகிறார் என்று நினைத்துக்கொண்டு கையில் ஒரு தடியுடன் நாயக்கர் மாடிப் படியில் ஏற, அவன் அவர் பின்னால் ஓடினான். இதற்குள் ராஜரத்தினம், உயிரே இருந்து கீழே கோபத்துடன் ஓடி வந்தான்,

சத்தியவேல் தடியால் அடித்துவிட்டான். நாயக்கர் தலையிலிருந்து இரத்தம் 'குபு குபு' என்று ஓடிவந்தது. நிலை தடுமாறி படிக்கட்டின் மேல் விழுந்து, அவர் உருண்டு உருண்டுக் கீழே வந்துக் கிடந்தார். மூச்சு பேச்சில்லை; கண்களில் மாட்டப்பட்டக் கண்ணாடி சுக்கு நூறாக ஓடியது; ''ஐயோ,

''படார் என்று ஒரு அடி'' நாயக்கர் தலையின் மேல், அப்பாவை எல்லோரும் சேர்ந்து சாவ அடிக்கிருர்

களே" என்று கூறி 'ஹோ' என்று அலறிவிட்டாள் கமலா. பெரிய கூட்டம் கூடி விட்டது. சுமதி பயத்தால் பேயடித்தவள் போலாகி விட்டாள். லட்சுமி அம்மாள் அலறிக்கொண்டு அங்குமிங்கு ஓடிக்கொண்டு துடி வாய் துடித்தாள். நாயக்கர் வீட்டுக்குத் தூக்கிச் செல்லப்பட்டார். சுய உணர்வு இல்லாமல் நாயக்கர் படுக்கையில் கிடத்தப் பட்டு, அவர் பக்கத்தில் சோகமே உருவெடுத்தாற் போல் கமலா உட்கார்ந்திருந்தாள். நாயக்கர் இனிமேல் பிழைக்கமாட்டார் என்று கமலா கலங்கியவாறு கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்.

8. சுமதிகடத்தப்பட்டாள்!

கஜபதி நாயக்கர், மாடிபடிக் கட்டிலிருந்து உருண்டு உருண்டு கீழே விழுந்ததும், அவர் மண்டையிலிருந்து 'குபு குபு' என்று இரத்தம் பீறிட்டு ஓடியதையும், இரத்த வெள்ளத்தில், அவர்மூச்சற்றுக்கிடந்ததையும், அவர் கழுத்தில் சுற்றியிருந்த அங்கவஸ்திரம், இரத்தத்தில் தோய்ந்துகிடந்ததையும், தற்போது, அவர் மரணத்தோடு போராடிக்கொண்டிருப்பதையும், லட்சுமி அம்மாள், நினைத்து பார்த்தாள்; அவள் தலை சுற்றியது" என்ன செய்வ? எங்கே செல்ல?" என்று ஒன்றும் ஓடாமல், வீட்டின் பின்புறமுள்ள ஒரு பெஞ்சில் போய் படுத்துக்கொண்டு கண்ணீர் வடித்தவண்ணமாக இருந்தாள். முகத்தைப் புடைவையால் நன்கு இழுத்து மூடிக் கொண்டாள்.

"கஜபதி நாயக்கர் செத்து விட்டால்... தூக்குகயிறு... குடும்பம் சின்னபின்னமாக்கப் படுதல் !! ஐயோ எனக்கு தூக்குத்தண்டனையா? நான் கொலைகாரனா? போலீஸ்காரர்கள் என்னைக் கைது செய்து ஜெயிலில் அடைக்க இப்போதே வந்து விடுவார்களே?" என்று கிலிபிடித்தவண்ணமாக கீழே உள்ள ஒரு அறையில் படுத்துக்கொண்டு, அறைக்கு உள் தாழ்போட்டுக் கொண்டான் சத்தியவேல்.

ராஜரத்தினம், தன்னுடைய அறையில்; எதையோ பறி கொடுத்தவன் போல், பேய் பிடித்தவன் போல் அறையில் அங்கும் இங்கும் நடந்துகொண்டிருந்தான். சிறிதுநேரம் நாற்காலியில் உட்காருவான்... திடீரென்று எழுந்து அறையை விட்டு வெளியேறி, தெருவின் ஒரு முனையிலிருந்து மறுமுனை வரையும், யாராவது, கஜபதி நாயக்கர் உடல் நிலையைப் பற்றிப் பேசுவார்களா? என்று பார்ப்பான்... திரும்ப, அறையினுள் விறு விறு என்று வருவான்!... கட்டிலில் சுருண்டு படுப்பான் ... இப்படியாக அவன் மனம் கடும் குழப்பத்திற்குள்ளாது : சுமதிக்கு ராஜரத்தினம், நிலையைப் பார்த்ததும், அவள் தலையில் இடி விழுந்தது போல் இருந்தது. இரண்டு பேருக்குமிடையில் அமைதி நிலவியது. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவண்ணமாக இருந்தார்கள்.

கோவிந்தசாமி நாயக்கர், காலையில் சொந்தக்கார் ஒருவர்

Maniyam Industrial & Engineering Works

Government Approved Fabricator & Contractor.

(Regd. No. 5.)

A·C,C. CEMENT STOCKIST

2, Sankari Road,

Trichengode,

(Salem Dt.)

(சென்னை அரசினர் உதவிபெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்புப்பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பனைவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக் கருவிகளும், கட்டட சாமான்களும், சகல விதமானலேத்து வேலைகளும், வெல்டிங்கும் செய்துகொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

கலியாணத்திற்குச் சென்றிருந்ததை ராஜரத்தினம் நினைத்தான். "ஐயோ, அப்பா இருந்திருந்தால், இந்த விபரீத நிலை வந்திருக்காதே? அப்பா வந்ததும்,...... கஜபதி நாய்க்கரை தாக்குண்டதைக் கேள்விபட்டால்...கொதித்தெழுந்து விடுவார்...அப்பாவுக்கும் பெரியபாவுக்குமிடையில் எவ்வளவு பாசம்?...இனி இந்த பாசக் கயிறு அறுத்தெறியப்பட்டுவிடும்...கமலாவின் பாசம் தோய்ந்த முகம், இனிமேல் வெறுப்பைக் கக்கும்...இனி அவள் என்னை எதிரியாகத்தானே கருத முடியும்" இப்படியாக ராஜரத்தினம் குழம்பிக்கொண்டிருக்கும்போது, "லட்சுமி,...லட்சுமி...தண்ணீர் கொண்டு வா?...கலியாணம் வெகு சிறப்பாக நடந்தது......அண்ணன் வராததால்...கலியாணத்திற்கு வந்த எல்லோரும் வருத்தப்பட்டார்கள்" என்று கோவிந்தசாமி நாயக்கர் லட்சுமி அம்மாள் வீட்டினுள் இருப்பதாக நினைத்துக்கொண்டு பேசுவது அவன் காதில் விழுந்தது. எப்போதுமே, வெளியிலிருந்து வீட்டிற்குள் வந்ததும், வெளியில் நடந்த ரசமான நிகழ்ச்சிகளை தன் அருமை மனைவி லட்சுமி அம்மாளிடம் கூறுவது கோவிந்தசாமி நாயக்கரின் வழக்கம்; ஆனால் "ஹூம்" சொல்ல லட்சுமி அம்மாள் வீட்டில் இல்லை. "டேய், ராஜ்ரத்தினம்...என்ன? வீட்டில் ஒருவரும் இல்லையா?" என்று கர்ஜித்தார் நாயக்கர்.

இதற்குள், ராஜரத்தினம் கீழே இறங்க, அவனைப்பின்

தொடர்ந்து சுமதி ஓடி வரவும், அறையில் அடைபட்டுக் கிடந்த சத்தியவேல், அப்பாவின் குரல் கேட்டு தலைதெறிக்க ஓடிவரவும் சரியாக இருந்தது. எல்லோருடைய முகத்திலும் பீதியின் சாயல் தெரிந்தது.

வீட்டில் சத்தம் கேட்க, பயத்தால் உந்தப்பட்டு, அடிமேல் அடி எடுத்து வைத்து, தோட்டத்திலிருந்து, கோவிந்தசாமி நாயக்கர் இருக்கும் அறையை நோக்கி வந்தாள் லட்சுமி அம்மாள்.

கோவிந்தசாமி நாயக்கரைச் சுற்றி ராஜரத்தினம், சுமதி, சத்தியவேல், நின்றுகொண்டு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். கப்பலின் திசை காட்டும் கருவி போல், ஒவ்வொருவர் முகமும், சுழன்று வந்துகொண்டிருந்தன. இதற்குள் அடிபட்ட மான்போல, லட்சுமி அம்மாள், கோவிந்தசாமி நாயக்கர் கண் பார்வையில் படும்படி, ஒரு பெருமூச்சு விட்டு விட்டு, தரையில் உட்கார்ந்து கொண்டாள்.

எல்லோருடையமுகத்திலும், பீதிவழிந்து கொண்டிருப்பதை பார்த்த கோவிந்தசாமி நாயக்கர் "என்ன?...என்ன நடந்தது! ஏண்டா எல்லோரும் ஒரு மாதிரி இருக்கிறீர்கள். லட்சுமி! ஏன் அழுகிறாய். சுமதி! நடந்ததைச் சொல்லம்மா" என்று பரபரப்புடன் கேட்டார்.

"உங்க அண்ணன் சாவக் கிடக்கிறார்! சத்தியவேல் தடியால் தாக்கிவிட்டான் உங்கண்ணனை; மாடியில் இருந்து விழுந்து விட்டார். ஒரே இரத்தம்... நிலைமை ரொம்ப மோசமாக இருக்கிறது" என்றாள் லட்சுமி அம்மாள். துக்கம் தொண்டையை அடைத்தது; வார்த்தைகள் வெளிவர மறுத்தது.

"ஆ...அண்ணனை சத்தியவேலா அடித்தான்...சீ... நீயும் எனக்கு ஒரு பிள்ளையா?...அவரை அடிக்க நீ யாருடா?...பேயா... இனிமேல், சீரும் சிறப்பான நாயக்கர் குடும்பம் சீரழியும் காலம் வந்துவிட்டது...நான்...நான்... இனி எப்படி வாழப்போகிறேன்... இனி சாவதுதான் மேல்... அண்ணன் சாவான்...நானும் செத்து விடுவேன்... நீங்கள் வாழுங்கள்" என்று விக்கி விக்கி அழ ஆரம்பித்து விட்டார்; கண்களில் ஓடியகண்ணீரைத், தன்னுடைய அங்கவஸ்திரத்தால் துடைத்தார் நாயக்கர். அவரை பார்க்க ரொம்ப பரிதாபகரமாக இருந்தது.

ஒருவரிடமும், ஒன்றும் பேசாமல், ஒரு பயங்கர பார்வை பார்த்து விட்டுக், கட்டிலில் போய் 'தொப்' பென்று விழுந்தார் நாயக்கர். அந்த பார்வை அவருடைய துக்கத்தைக் காட்டியது. அன்று முழுவதும் அவர் ஒருபிடி சோறு கூடச் சாப்பிடவில்லை. எல்லோரும் பேயடித்தவர்கள் போல் இருந்தார்கள். ஆழ்ந்த அமைதி நிலவியது.

"போலீஸ்காரர்கள். பாண்டியனைக் கைது செய்யவந்திருந்தபோது, காந்தாவின்

முகத்தின் பீதியின் சாயல்படர்ந்திருந்தது; அடிக்கடி, அவள் ஏன் வேலுவின் முகத்தை பார்த்தாள் அவள் பார்வையில் ஏன் சொல்லமுடியாத வெறுப்பு தெரிந்தது. எங்கெங்கு காந்தா சென்றுளோ, அங்கங்கே, 'திரு திரு' என்ற பார்வையுடன் வேலு அவளைப்பின் தொடரக் காரணம் என்ன? இந்த இக்கட்டானக் கட்டத்தில், எப்போதுமே, காந்தா நம்மத்தியில் இருந்து ஒத்தாசைச் செய்வாளே? ஏன் அவள் இங்கு நிற்கவில்லை? பாண்டியனை போலிஸ்காரர்கள் கைது செய்வதற்கு முன்னாலே, எங்கேயோசென்று விட்டாளே? இதில் ஏதோ ஒரு பெரிய மர்மம் இருக்கத்தான் வேண்டும்" என்று பற்பலவாறு நினைத்துக் கொண்டு "எதற்கும், கமலாவிடம் சென்றுவரலாம்" என்ற முடிவோடு, சுமதி, கஜபதி நாயக்கர் வீட்டிற்குள் சென்றாள்; கஜபதி நாயக்கர், சுயஉணர்வற்று படுக்கையில் கிடந்தார். அவர் பக்கத்தில் கமலா உட்கார்ந்து கொண்டு, அவர் முகத்தை பார்த்துக் கொண்டிருந்தாள். தாண்டவராயன், அவர் காலை வருடிக் கொண்டிருந்தான் வேலு எதையோ, யோசித்துக் கொண்டு, நாயக்கர் தலக்கமர்ட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தான். சுமதியைக் கண்டதும், விலுக்கட்டாயமாக, மகிழ்ச்சியை வரவழைத்துக் கொண்டு, அன்போடும், பாசத்தோடும் அவளை வரவேற்றாள் கமலா. சிறிது நேரம் பேசிவிட்டுராஜரத்தினம் அறைக்குள் வந்து சேர்ந்தாள் சுமதி.

இந்த இக்கட்டான நிலையில் சுமதி கமலா வீட்டிற்குள் சென்றதை, ராஜாத்தினம், மேல்மாடியில் இருந்து பார்த்துவிட்டான்: சுமதியின் மேல் சொல்லமுடியாத ஒரு வெறுப்பு ஏற்பட்டுவிட்டது.

"என்ன சுமதி? கமலாவிடம் என்ன கூறினே?...ஏது நாங்கள் மனம் தாளாமல் இருக்கும் போது...நீ நல்லவ்ளாகி விட்டாய்...போ...போ...எப்படியும், நல்லா இரு..." என்றுன் ராஜரத்தினம். அவன் பேச்சில் நக்கலும் கிண்டலும் கலந்திருந்தது.

"நீங்கள் நினைப்பது தவறு உங்கள் பெரியப்பாவை அப்படி பகிரங்கமாக நீங்கள் திட்டி இருக்கக்கூடாது. உங்கள் குடும்பவிவகாரத்தைக் கவ்வி இருக்கும் சதியை நான் அறிவேன். காலப்போக்கில் நீங்களும் அறிவீர்கள். குடும்ப விவகாரம்...படித்தவர்கள் நீங்கள் தனியாக உங்கள் பெரியப்பாவைக் கண்டித்திருக்கலாம்...உங்கள் குடும்பத்தில் புயலுக்கு வித்து விடப்பட்டு விட்டது. கமலா...எவ்வளவோ நல்லவள்...கஜபதி நாயக்கர்மீது உங்களுக்குக் கோபம் இருந்தால்கூட...கமலா முகத்தை பார்த்திருக்கவேண்டும்" என்று மட மடவென்று பேச ஆரம்பித்துவிட்டாள் சுமதி.

நீ அறிவாளியாகி விட்டாய் நான் முட்டாள் ... வாயை மூடு...ஏது...கமலாவுக்குக் கையாளா நீ" என்று கூறி வேகமாக அவள் கன்னத்தில்

அடித்துவிட்டான் ராஜரத்தினம்.

கண்களில் கண்ணீர் வடிய, பாசம் தோய்ந்த முகத்தோடு, அவனை ஒருமுறை பார்த்துவிட்டு ஒன்றுமே பேசாமல் தன் வீட்டை நோக்கிநடந்தாள் சுமதி. சுமதியை ஏதோகோபத்தில் அடித்து விட்டான் ராஜரத்தினம். அப்பப்பா!...அவன் மனம் பட்டபாடு ... ஆயிரம் சம்மட்டிக் கொண்டு அவன் தலையில் அடித்த மாதிரி இருந்தது அவனுக்கு...எப்படியும் சுமதியிடம் சென்று மன்னிப்பு கேட்க்கவேண்டும் என்று துடியாய் துடித்தது அவன் மனம். சுமதியை அடித்தது, தன்னுடைய முட்டாள் தனம் என்றுக் கூறியது அவன் மனம்.

சுமதி தன் வீட்டை வந்தடைந்ததும், கண்ணப்ப முதலியார், வீட்டை விட்டு வெளியே றவும் சரியாக இருந்தது: கையில் குடையுடன், நெற்றியில் குங்குமப் பொட்டோடு, வெளியே வந்த, கண்ணப்ப முதலியார், சுமதி முகத்தில் துக்கக் குறியைக் கண்டவுடன், "ஏன், சுமதி, ஒரு மாதிரியாக இருக்கிறே?" என்ருர். "அப்படி ஒண்ணு மில்லே...வரும்போது ...கண்ணில் தூசி விழுந்துவிட்டது...அதனுல்தான்..." என்ருள் சுமதி. "சரி, நான் ஒரு முக்கிய ஜோலியாக ஒரு இடம் செல்கிறேன். வர இரவு 11 மணியாகும்...பார்த்துக்கொள்" என சொல்லி விட்டு தன் அருமை மகளை ஒரு முறை அன்

போடு பார்த்துவிட்டு வெளியேறி விட்டார் முதலியார்.

போன காரியத்தை ஒருவாறு முடித்துவிட்டு, இரவு 11 மணிக்கு வீடு திரும்பினர். வீட்டிற்குள் வந்ததும், சுமதியைத் தேடினர். அங்கு மிங்கும் ஓடினர்; கொல்லைப்புறத்தில் தேடினர். சுமதி வீட்டில் காணப்படவில்லை. அவள் அறையில் ஒரு கண்ணாடி கிளாசில் பித்தளைகந்தக உப்பு (Copper sulphate) இருப்பதை அவர் பார்த்தார். தூக்க மருந்து பவுடர், அறையில் அங்குமிங்கும் சிதறிக்கிடப்பதை பார்த்ததும் அவர் கலங்கிப் போய்விட்டார்.

''விஷம் விஷம் ஐயோ! என் மகளுக்கு விஷம் கொடுக்கப்பட்டு,' அவளை யாரோ கடத்திச் சென்று விட்டார்கள்'' என்று வாய்விட்டு கதறி வீட்டின் பின்புறம் சென்றுபார்த்தார். கண்ணப்ப முதலியார் வீட்டின் பின்புறம், ஒரேகாடு மயமாக இருக்கும்; ஒருரோடு காட்டின் மத்தியில் செல்கிறது: அந்த ரோட்டை ஒரு வண்டிப்பாதை இணைக்கிறது. ரோடு காயல்பட்டணம் வழியாக திருச்செந்தூர் செல்கிறது. வண்டிப்பாதையில், கார் சென்ற தடம் பட்டென்று தெரிந்தது. கார் அங்கு வரக் காரணம் என்ன? அந்தக்காரில் தான் சுமதி கடத்திசெல்லப்பட்டிருக்கவேண்டும் என்று எண்ணியவாறு முதலியார், தலைவிரிகோலமாக போலிஸ் ஸ்டேசனுக்கு ஓடினர். நடந்தவற்றை படபடவென்று போலிஸ்காரரிடம் கூறினர் முதலியார். எல்லாவற்றையும் ஊன்றிக்கவனித்த, ஏட்டு கிருஷ்ணசாமி, திடீரென்று, போனின் மணி அடித்ததும், போனைக்காதில் வைத்து ''ஹலோ'' என்று கேட்டார்.

''போலிஸ் ஸ்டேசனுங்களா, கண்ணப்ப முதலியார் மகள் கடத்தப்பட்டுள்ளாள் கட்டப் பொம்மன் சத்திரத்தில், பாதாள அறையில் வைக்கப் பட்டுள்ளாள். அவளுக்கு விஷம் கொடுக்கப்பட்டுள்ளது'' என்று போனில் ஒரு இளம் பெண் பேசினள். அவள் பேச்சில் கரகரப்பு இருந்தது.

''ஹலோ, நீங்கள் யார்'' என்ருர் ஏட்டு கிருஷ்ணசாமி. இதற்குள் போனில் பேச்சு தடைபட்டு விட்டது. பேசிய குரலும் நின்றுவிட்டது.

''ஹலோ ... ஹலோ ... ஹலோ . . .'' என்றுகிருஷ்ணசாமி போனில் பேசியும், ஒரு வித பதிலும் கிடைக்காததால். ஏட்டு கிருஷ்ணசாமி, போனைக் கீழே வைத்துவிட்டு ''ஏய் 824 போலீஸ் வானை எடு. கட்டப் பொம்மன் சத்திரத்திற்கு விடு'' என்று கூறிக்கொண்டு ''முதலியார் நீங்களும் எங்களோடு வாருங்கள்'' என்ருர். முதலியார் மனது ''டக்டக்'' என்று அடித்துக்கொண்டது.

கண்ணாடியில் தண்ணீர் துளிகள் படிந்து ஓடிக் கொண்டிருந்தால், அதனுடைய ஒளியும் அழகும் பாழடைந்து தோன்றுவது போல, அவர் முகத்திலிருந்து வியர்வைத்

நாடு முன்னேற......?

—த. சிகாமணி—

1 ஆண்டவன்போல் அங்குமிங்கும் எங்கும் சென்று
ஆற்றாத கோடையிலும் உணவு தேடி
தாண்டரிய மலைமீது துள்ளி ஓடும்
தீண்டரிய ‡ வரையாடு காண்மின்; ஒப்ப
வேண்டாத பழிசோம்பல் விரைந்து நீக்கி
வேண்டும்பல் பொருள்தேடி உண்டு வாழ
தூண்டாமணி விளக்குபோல் நாளும் செல்லும்
தூயதேனி எறும்பு எலி வண்டு காண்பின்

* * * *

‡ மலையில் வசிக்கும் ஒருவகை ஆடு.

2 சோம்பலின்றி இவைகளெல்லாம் நன்றும் வாழ்ந்து
சோர்வின்றி நம்மைஎள்ளி நகைத்தல் காண்பின்
வீம்புடனே இன்றுமுதல் நாமெல் லோரும்
வீறுற்று விரைந்தெழுந்து அவைகள் நாண
சோம்பல்கள் நீக்கிடுவோம்; உழைத்தே உண்ண
அம்முறையில் உறுதிபூண்டு சோம்பல் போக்கி
கூம்பாமல் உழைத்துழைத்து ஏற்ற கூலி
கூம்பாமல் பெற்றிடுவோம் கொம்பு ஊதி.

* * * *

3 மாண்புமிக்க நம்நாட்டில் செல்வம் ஓங்க
மாடெனவே பாடுபடும் தொழிலாளர்க்கும்,
சான்வயிறு பசிபோக்கும் பயிர்கள் ஏற
காடுவெட்டி நிலம் திருத்தும் பாட்டாளிக்கும்,
கூனின்றி நாமெல்லாம் ஒன்றாய் கூட
வீடுகட்டி நலம் செய்யும் வித்தகர்க்கும்,
வீண்செலவு செய்யும் முதலாளி எல்லாம்
கோணாமல் உற்றகூலி கொடுத்தல் வேண்டும்.

துளிகள் வழிய, அவரது முகமும் அதனுடைய அழகும், களையும் பாழடைந்து விட்டது போல் காட்சி அளித்தது. நெற்றியிலிருந்த குங்குமப் பொட்டை, வியர்வைத் தண்ணீர் கரைத்துக்கொண்டு மூக்கு வழியாக வடிந்து கொண்டிருந்தது. சிகப்பாக ஓடிய அந்த வியர்வைத் தண்ணீர், உண்மையிலே அவர் இரத்தக் கண்ணீர் விடுவதுபோல் தோன்றியது.

(தொடரும்)

குடுமியா? கிருப்பா?

டாக்டர் பி.எஸ். சின்னசாமி
பி.எஸ்.ஸி; எம்.பி.பி.எஸ்

[கணவன் குடுமி வைத்துக் கொண்டிருக்கிருன் என்று அவனை வெறுத்து ஒதுக்குகின்ருள் நாகரீகச் சின்னமான குந்தளா, பி. ஏ. பிறகு அவள் கணவனே ''உனக்காகக் குடுமியைக் கத்தரித்துவிடப் போகிறேன்'' என்று எழுதுகிருன். ''வேண்டாம் குடுமியை எடுக்க வேண்டாம்,'' என்று தந்தி அடிக்கிருள் அவள்.]

வருவோரையும் போவோரையும் வைதிகக்காரியங்களையும் பம்பரம்போல் சுழன்று கவனித்துக்கொண்டிருந்தாள் குந்தளா அவள் கணவனும் மகனும் மணையில் அமர்ந்திருந்தனர். அந்த தெருவே, ஏன் அந்த சிறிய ஊரே அங்கு திரண்டு வந்திருந்தது. அன்றுதான் அவள் மகனுக்கு ஐந்தாவது வயது ஆரம்பம். நாலு வயது பூர்த்தியாயிற்று அன்று குழந்தைக்குக் குடுமிவைத்து படிக்க வைக்கும் கல்யாணம். கொழு கொழுவென்று வளர்ந்திருந்த அழகான குழந்தை தலையில் கூடை மயிர் கழுத்துக்குப்பின் பின்னிவிட்டால் அரைசாண் நீளம் தொங்கக்கூடிய மயிரை அழகாக கிருஷ்ணன் கொண்டை போட்டுப் பூச்சூட்டியிருந்தார்கள். கெட்டிமேளம் முழங்க கோலமிட்ட மணையில் குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு உட்கார்ந்தான் அவள் கணவன். பழுத்த சுமங்கலிகள் ''கௌரிகல்யாணம்'' பாடினர். குடுமிவைக்க நாவிதன் குழந்தையின் தலையைத் தொட்டதுதான் தாமதம், ஆரம்பித்துவிட்டது 'வீல் வீல்' என்று அழ அது; நாவிதன் குழந்தையின் தலைக்கு அருகில் கத்தியைகொண்டு போகக்கூட முடியவில்லை. எங்கே தலையில் கத்திபட்டு காயம் ஏற்படுமோ? என்று குந்தாளவின் கணவ பயந்தே போனர். மனைவியைப்பார்த்து குந்தளா, குழந்தை அலண்டால் சுரம் சிரம் வந்துவிடப் போகின்றது, வாசிக்கவைத்தால் போதும். சவரம் தேவையில்லை?'' என்ருர் ''அவன் பிடி

வர்தம் பண்ணினன் என்று சம்பிரதாயத்தை விட்டுவிட முடியுமா? ஜாக்கிரதையாய் அமுக்கிப்பிடித்துக்கொள்ளுங்கள்'' என்று கூறி மயிர்வினேவோரின் திட்டு என்றும் பாராமல் குழந்தையைத் திமிறமுடியாமல், அழுத்திக் கணவன் மடியில் இருத்தினள். நாவிதன் 'விறு விறு' என்று அழகாய்க் குழந்தைக்கு குடுமிவைத்தான் என்னதான் பிடித்துக்கொண்டபோதிலும் ஓரிரண்டு இடங்களில் அந்த இளம் தலையில் கத்தி காயம் படத்தான் செய்தது.

க்ஷவரம் முடிந்ததும் குழந்தையின் அழுகை ஓயவில்லை. அழும் குழந்தையைத் தூக்கிக் கொண்டு உள்ளே சென்று குழந்தையைக் குளிப்பாட்டி தானும் குளித்து அதற்கு சாக்கலேட் முதலியவற்றைக் கொடுத்து சமாதானப்படுத்தினள். க்ஷவரம் செய்த தலையில் சந்தனம் பூசி தலையில் எரிச்சல் இல்லாமல் செய்தாள்.

வாசிக்க வைத்தல் எல்லாம் இனிது நடந்தேறியது. மாலை அவள் கணவன் ''குழந்தைக்குக் குடுமி வைக்காமல் விடமாட்டேன் என்று ஒற்றைக் காலில் நின்றுவிட்டாயே,'' என்று கேட்டார் புன்னகையொன்றை யுதிர்த்தாள் பதிலுக்கு.

நினைவுச்சுழல் பின்னேக்கிச் சென்றது. அவள் கடந்த கால வர்ழ்க்கை.

பிரபல வக்கில் வனேச்வருக்கு மூத்தபெண் நான். இளையவள் கனகா. கனகாவுக்கு பதிமூன்று வயதுதான் ஆகி யிருந்தது. நான் பீ.ஏ. பாஸ் செய்துவிட்டு ஹிந்தி படித்துக் கொண்டிருந்தேன். வயது பதினெட்டு நோஞ்சலால் மாநிறமாய் வாளிப்பாய் நான் இருப்பதாக என் அம்மா சொல்வாள். நல்ல நீர் பாய்ச்சப்பட்ட தென்னங்கன்றின் செழுமையான முழு ஓலைபோல் இருக்கும் பின்னி தொங்கவிட்ட கேசம். கல்யாணத்திற்காக ஜாதகங்கள் வந்து போய்க் கொண்டிருந்த காலம் அது.

ஒரு நாள் மாலை.

''அம்மா தினம் தினம் உனக்கு இந்த வெந்தயத் தோசையை விட்டால் வேறே ஒரு எழவு டிபனும்' கிடையாதா? எனக்கு ஒண்ணும் வேண்டாம்' என்று ஒரு டம்ளர் குளிர்ந்த தண்ணீரைப் பானையிலிருந்து எடுத்து 'மடக் மடக்' கென்று ஒரே மூச்சில் முழுங்கிவிட்டு 'டக்டக்' என்று காலில் 'ஸ்லிப்பர்' ஒலிக்க மாடியிலுள்ள என் அறைக்குப் போய்விட்டேன். கீழே அம்மா அடுக்களையில் ஏதோ முனகிக்கொண்டிருந்தாள்.

என்னை யறியாமல் எதைக் கண்டாலும் வெறுப்பு ஏற்பட்டிருந்தது. எனக்கு அப்பொழுது ஒரு வேளை காதல் நோய் வந்திருந்ததோ? இரபொழுது நினைத்துப்பார்த்தால் என் அப்பொழுதைய நிலை சிரிப்புதான் உண்டாகிறது அலுத்துக்கொண்டே சாய்வு நாற்காலியில் சாய்ந்தேன். அரு

முரளி ஸ்டோர்ஸ்

எவர்ஸில்வர், பித்தளை பாத்திர வியாபாரம்

67-16, ஸர் உஸ்மான் ரோடு,

பர்கிட் ரோடு,

(பஸ் ஸ்டாண்ட் எதிரில்)

தியாகராய நகர் சென்னை-17.

மலிவான விலையில் புதியதாகவும், மிக நேர்த்தி யாகவும், உத்திரவாதமும் உள்ள

எவர்ஸில்வர், பித்தளைப் பாத்திரங்கள்

எங்களிடம் கிடைக்கும்

தயவு செய்து எங்கள் கடைக்கு வருகை தாருங்கள்! தவறுதீர்கள்!!

இல் இருந்த 'ரேடியோ' வைத் திருகினேன். கணீரென்று

"கையும் கையும் கலந்திட
வா ஜாலியாகவே
காதல் கதை பேசிடலாம்
ஜோடியாகவே"

என்ற பிரபல படத்தில் வரும் காதல்பாட்டு முழங்கியது.

ரேடியோவின் வாயை அடைத்து விட்டேன்.

இதற்குள் அம்மா ஒரு தட்டில் இரண்டு தோசைகளை எடுத்துக்கொண்டு என் அறைக்குள் வந்துவிட்டாள், அம்மாவிற்கு சற்று பருமனான உடம்பு, மாடி ஏறி வந்ததால் மூச்சு திணறியது.

"என்னடி குந்தளா, சின்னக் குழந்தைமாதிரி பிடிவாதம் பண்ணுகிறாய். நாளைக்கு வேறு ஏதாவது பண்ணிவைக்கிறேன். இன்னிக்கு இதை எடுத்துக்கோ" என்றாள்.

"இல்லேம்மா என்னமோ வேண்டாம் போலிருந்தது" என்று சாப்பிட ஆரம்பித்தேன்.

எங்கப்பாவுக்கு ஜாதகம் பார்ப்பதில் அபார நம்பிக்கை. எனக்கு சற்று தோஷமுள்ள ஜாதகம்தான் பொருந்தும்

என்று ஜோஸ்யர் சொல்லிவிட்டார். அதனால் எல்லா வரன்களும் தட்டிக்கழித்துக் கொண்டே இருந்தார். என் தோழிகளில் சிலர் மணமாகி கையில் ஒரு குழந்தையும் வயிற்றிலொன்றுமாக நின்றனர். அந்தரங்கத் தோழிகளில் சிலர் தங்கள் கணவன்மார்கள் இரவில் படுத்தும் பாடுகளை என்னிடம் கதையளப்பார்கள்.

தோசையைத் தின்று தட்டைக் கீழே வைத்தேன். "குந்தளா இன்று ஒரு வரன் பொருத்தமாயிருக்கிறது என்று உன் அப்பா சொன்னார்டி. பையன் பெயர் ஸப்தரிஷியாம். எம். ஏ., பி. இ. டி. பாஸ் பண்ணி தஞ்சை மாவட்டத்தில் ஒரு பெரிய 'ஹைஸ்கூலில்' டைரக்டராய் இருக்கிறானும். நிறை நிலன்புலன் வேறு இருக்கின்றதாம். வாட்டசாட்டமாய் நல்ல மூக்கும் முழியுமாய் புன்முறுவல் பூத்த முகத்துடன் இருக்கிறானும்! அம்மா அப்பா கிடையாதாம். அவன் மாமா தான் எல்லாம் முன் நின்று செய்கிறாராம், உன் போட்டோவைப் பார்த்து சம்மதம் என்று கூறிவிட்டானும். அறுவடையும் பரீக்ஷையும் சேர்ந்திருப்பதால் பெண்பார்க்க வர இயலவில்லையாம். எல்லாம் நீங்கள் சொன்னால் சரி. முகூர்த்தத்தை வைத்து விடுங்கள், என்று உன் அப்பாவிடம் சொல்லிவிட்டானும். "நீ என்னடியம்மா சொல்றே..." என்றாள் தாயார். "அப்பாவிற்கும் உனக்கும் பிடித்தால் நான் என்னம்மா சொல்லப்போகிறேன்?" என்று கூறுவதற்குள் என் முகம் சிவந்து விட்டது. என் அறையில் சிவப்பு நிற மின்சார விளக்கு போட்டிருந்தேன். அந்த விளக்கொளியில் என் முகம் ரத்தசிவப்பாய்த் தோன்றியது.

ஆடம்பரமான கல்யாணத்திற்கு துரித ஏற்பாடுகள் நடந்தன. எனக்கு 'ஸப்தரிஷி' என்ற பெயர் பிடிக்கவில்லை. அச்சாபீஸுக்கு அனுப்பிய அழைப்பின் நகலில் மிஸ்டர் எஸ். ரிஷி. என்று ஆங்கிலத்தில் அனுப்பிவிட்டேன்.

மாப்பிள்ளை வீட்டார் சிலர் வந்துசேர்ந்தனர். மாப்பிள்ளையழைப்பிற்கு ஏற்பாடுகள் துரிதமாய் நடந்துகொண்டிருந்தன. மாப்பிள்ளையைப் பார்க்காமலேயே என் சம்மதத்தை அளித்து விட்ட படியால் எனக்கு நெஞ்சு படக் படக் என்று அடித்துக்கொண்டிருந்தது, இருட்டிவிட்டது. மாப்பிள்ளையைக் காணும். எல்லோரும் வாசலையே நோக்கி நின்றார்கள். அப்பொழுது டெலிபோன் மணி கணகணவென்று அடித்தது. நான் தான் ரிசீவரை எடுத்தேன். டெலிபோன் ஆபரேடர் தனக்கே உரித்தான கீச்சுக்குரலில் "டிரங்க்கால் மிஸ்டர் வனேச்வருக்கு," என்றாள். நான் உடனே அப்பாவைக் கூப்பிட்டு டெலிபோனை அவரிடம் கொடுத்தேன். ஒரு நிமிஷத்தில் அப்போனைக் கீழே வைத்துவிட்டார். என்னைப் பார்த்து அப்பா சொன்னார், "மாப்பிள்ளைக்குப் பள்ளிக்கூடத்தில் திடீரென்று மேலதிகாரிகள் வந்து விட்ட படியால்

புறப்பட முடியவில்லையாம். இரவு ஒன்பது மணிக்கு காரில் வந்து விடுவதாகச் சொன்னார், முகூர்த்தத்திற்கு முன் அவரை எப்படியும் பார்த்து விடலாம் என்று எண்ணியிருந்த என க்கு இதுபெரும் ஏமாற்றமாய் விட்டது.

பொழுது புலர்ந்தது, மங்கள வாத்யத்துடன், மங்களஸ்நானம், அலங்காரம் எல்லாம் முடிந்தது. பரதேசகோலத்தில் மாப்பிள்ளை காசி யாத்திரை புறப்பட்டு விட்டார். என்னை பந்தல் முகப்பில் மாலை மாற்றலுக்குத் தயாராய் நிறுத்தி விட்டனர். ஒரே கூட்டம். எங்கும் கல கலப்பு. புஷ்பமும், பன்னீரும், கல்யாண வீட்டில், ரம்யமான வாசனையை பரப்பியது. அந்த வாசனை போதாதென்று எங் கப்பா பந்தல் பூராவும் மருக் கொழுந்து சென்ட் கலந்த நீரை "ஸ்ப்ரே" செய்ய ஏற்பாடு செய் திருந்தார். மாப்பிள்ளையை என் எதிரில் கொண்டு நிறுத்தினர் கள். ஐயோ! நான்பட்டபாடு! அவரை நிமிர்ந்து பார்க்க வெட்கம் என்னைச் சூழ்ந்து கொண்டது. பாண்டும் நாதஸ்வரமும் மாறி மாறி முழங்கின. காமிராக் களின் மின்னல் வெளிச்சம் கண்ணைப் பறித்தது. யாரோ என் கையில் மாலையொன்றை என் கழுத்திலிருந்து எடுத்துக் கொடுத்து, "மாப்பிள்ளையைப் பார்த்து சரியாய் சூட்டு," என்றுர்கள். கெட்டி மேளம் முழங் கிற்று. மாலையை சூட்ட கை யைத் தூக்கி தலை நிமிர்ந்தேன். எனக்குத் தூக்கி வாரிப்போட் டது. என்ன ஏமாற்றம்! என் கனவுகள் சிதறின. என் கைகள் என்னை அறியாமலே பின் வாங்கின. மாப்பிள்ளை நான் எதிர்பார்த்தபடி எல்லாவிதத் திலும் பொருந்தி இருந்தாலும் ...தலையில் கட்டு குடுமியுடன் எதிரில் நின்றுர். முன்தலை அப் பொழுதுதான் க்ஷவரம் செய் யப்பட்டிருந்தது. பின் தலையில் பெரிய முடிச்சுடன் குடுமி. கூட் டத்தில் யாரோ என் கையைப் பிடித்து மாப்பிள்ளையின் கழுத் தில் மாலையைப் போட்டார்கள். ஏமாற்றம்... ஆத்திரம்... அவ மானம்...ஒன்றுமே செய்ய முடி யாத ஒரு இக்கட்டான நிலை... என் தலை சுற்றுவது போன்ற உணர்ச்சி...விறு விறு என்று முறையே ஊஞ்சல், லாலி, பாணிக்கரஹணம், என் கழுத்தில் மூன்று முடிச்சுகளும் விழுந்து விட்டன. நான் திருமதி குந் தளா ஸப்த ரிஷியாகி விட் டேன். உதட்டைக் கடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். என் உள்ளம் எரிமலை போல் குமுறிற்று. பிரகாசிக்க வேண் டிய என் கண்கள் நீரைக் கக்க விருக்கும் கறுமேகம்போல் கல ங்கின. என் வலக் கையைஅன் புடன் அமுக்கிப் பிடித்த அவர் கரத்தை உணர்ச்சியற்ற மரக் கட்டைபோல் பிடித்திருந்தேன் உறவினர்களும், தெரிந்த மனி தர்களும், தோழிகளும் நிறை ந்த அந்தப் பந்தலில் அவரு டன் சேர்ந்து நிற்கவே எனக்கு கூச்சமாயிருந்தது. முஹூர்த் தம் முடிந்தது. கூண்டிலிருந்து விடுபட்ட பறவைபோல்என்னை விசாரிக்க வந்த நண்பர்களைத் தள்ளிவிட்டுக்கொண்டு என் அறையை அடைந்து தனிமை யை நாடினேன். தலையணையில் முகம் புதைந்தது. இதுவரை

கட்டுப்படுத்திய கண்ணீர் ஊற்றாகப் பெருகியது. கால் மணி நேரம் ஆகியிருக்கும். அப்பொழுதுதான் கவனித்தேன். அந்த அறை இரவு சோபனத்திற்காக அரைகுறையாய் ஜோடிக்கப்பட்டிருந்தது.

இதற்குள் என் அம்மா தேடிக்கொண்டு உள்ளே வந்து விட்டாள். "இங்கே என்னடி பண்ணிக்கொண்டிருக்கிறாய்? உன்னை எங்கெல்லாம் தேடுவது? மாப்பிள்ளையின் பள்ளிக்கூடத்திலிருந்து நூற்றுக்கணக்கான மாணவர்கள் பரிசுகளுடனும், மாலைகளுடனும், வாழ்த்துப் பாடல்களுடனும் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றனர்," என்று கூறிக்கொண்டே என் முகத்தை நிமிர்த்தினவள் திடுக்கிட்டுப் போனாள். "என்னடி அழறாயா என்ன? என்ன அபசகுனமடி... என்னமாய்ப் பிழியப்பிழிய அழுதிருக்கிறாய்...உனக்கு என்னடி வந்தது?" என்றாள். எழுந்து உட்கார்ந்தேன். அம்மாவும்என் பக்கலில் உட்கார்ந்து கொண்டாள்.

என்னம்மா எனக்கென்று இந்தப்பட்டிக்காட்டு சாஸ்திரிகளை எப்படி பிடித்தீர்கள்? என் சிநேகிதிகள் முன்னால் எப்படியம்மா அவருடன் பந்தலில் நிற்பேன். அவர் தலையைப் பார்த்தாயா...கட்டுக் குடுமியும் முன் தலை க்ஷவரமும்..., என்று விம்மினேன்.

அம்மா எவ்வளவோ சமாதானம் சொன்னாள். எனக்கு ஒரே தலைவலி என்று கூறி விடுங்கள். எனக்கு அவர் அருகில் நிற்பது தண்டனைபோல் தோன்றுகிறது நான் இப்பொழுது கண்டிப்பாய் பந்தலுக்கு வரமுடியாது. வாழ்த்து மாலைகள் எல்லாவற்றையும் அவர் குடுமியிலேயே ஆட்டுங்கள்" என்று ஒரே பிடிவாதத்துடன் சொல்லிவிட்டேன். நான் பிரிந்து இருக்கவேண்டுமென்று மறைமுகமாகக் கூறினேன். அம்மாவிற்குக் கோபம் வந்துவிட்டது. என்னமோ சொல்லட்டும் சொல்லட்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தால் மேலே மேலே என்னடி அடுக்கிக்கொண்டே போகிறாய் கழுதை

221, Pilliar Koil Street,

MADBAS-3

221, பிள்ளையார் கோயில் தெரு,

சென்னை-3

இந்த பேச்செல்லாம் பேசத் தான் பி. ஏ. படித்தாய் போலிருக்கிறது. எல்லாம் உங்கப் பாவை அனுப்புகிறேன் எது வேணுமோ அதை அவரிடம் சொல். என்று விடு விடுஎன்று வெளியே போய்விட்டாள், என் தாயார் இதுவரை என்னிடம் இப்படி கோபப்பட்டதில்லை. ஐந்து நிமிடங்களில் என் அப்பா வந்துவிட்டார் என்னம்மா தலைவலியாமே என்று அருகில் வந்து உட்கார்ந்து கொண்டார். அப்பாவிடம் இதெல்லாம் எப்படி சொல்வது, சொல்ல பயம் இல்லேப்பா...இப்பொழுது தேவலை'' என்று கூறிக்கொண்டே கல்யாண பந்தலுக்கு வந்தேன். பள்ளி மாணவ மாணவிகளின் பாட்டுக்களிலும் வஞ்சனையில்லா துல்லியமான முகங்களையும் கண்டு என் மனச்சுமை இறங்கியது. ஓரிரண்டு முறை 'அவரை' நிமிர்ந்து பார்த்தேன். அவரது குடுமியை பார்க்க என் மனம் மறுத்தது அவர் குடுமி எனக்குச் சொல்லமுடியாத வெறுப்பை கொடுத்தது.

பிரபல பாடகர்பாட்டுக்கச்சேரியும் தேர் நீர்விருந்தும் அன்று மாலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவர் ரம்யமான சாக்லேட் கலரில் 'ட்வீடு கோட்டும், ஜரிகை அங்கவஸ்த்ரமும் ஜரிகை வேஷ்டியும் அணிந்து கொண்டு மணப்பந்தலுக்கு வந்தார். நானோ சாதாரணமான புடவையையே அணிந்துகொண்டுஅவர் பக்கத்தில் சோபாவில் அமர்ந்தேன். அன்று மாலை அணிந்துகொள்ளுவதற்காக ஒரு கடை விடாமல் சல்லடை போட்டு சலித்து முன்னூறு ரூபாய் முள்ளங்கி பத்தைபோல் கொடுத்து எனக்கென்று வாங்கியிருந்த 'டிஷ்யூ' புடவை பெட்டியில் தூங்கிற்று. அருகில் யாருமில்லாத ஒரு சமயத்தில் 'அவர்' ''ஏது. படித்த பெண் சகஜமாய்ப் பழகுவாய் என்று எண்ணியிருந்தேன். சுத்த எய்டின்த் செஞ்சுரி பெண்ணாக இருக்கிறாயே,'' என்றார். ஆனால் அவர் எதிர்பார்

த்த புன்னகையை என்ஞல் உதிர்க்க முடியவில்லை.

"யார் நாஞ நீங்களா" என்ற பதிலை வெளிவராமல் உதட்டை கடித்து அடக்கிக் கொண்டேன், யாரோ அங்கு வந்துவிடவே நிலமையை சமாளித்துக் கொண்டேன்.

என்னைப்பார்க்க வந்த தோழிகள் என் மன நிலையை ஊகித்துக் கொண்டார்கள். என் அந்தரங்க சிநேகிதியான பங்கஜம் என்னைத்தனியாய் கேட்டேவிட்டாள். எனக்கு அழுகை வந்துவிட்டது.

"சீ சுத்த அசடாயிருக்கிருயே; ராத்திரி சொன்ஞல் காலையில் கிருப்தான். இதுக்காகப் பொன்ஞன நேரத்தைப் பொருமி பொசுக்கலாமா?" என்று அறிவுறுத்திஞள், அவள்.

அவள் சொன்ன அந்த இரவும் வந்துவிட்டது. என்னை

தொழில்

மாதமிருமுறை

சந்தா விகிதம்

தனிப் பிரதி	0—4—0
ஆண்டு சந்தா	6—0—0
வெளி நாடு	8—0—0

உள்ளே அனுப்பிக்கதவை சாத்துமுன் அம்மா கவலையுடன் குரல் தழதழக்க என் தலையை வருடி, "குந்தளா நீ படித்தவள். சமர்த்தாய் நடந்து கொள்," என்ருள். உள்ளே வந்துவிட்டேன். ஆனால் என் கண்ணிலிருந்து நீர் வழிய ஆரம்பித்து விட்டது. கட்டுப்படுத்த முடியவில்லை.

என் கணவர் என் அருகில் வந்து நின்ருர். அழகிய வெண்பட்டு ஜரிகை வேஷ்டியை பஞ்சகச்சமாய் உடுத்தியிருந்தார். சட்டைபோட்டுக் கொள்ளவில்லை. மேலே அழகான பட்டு உத்தரீயத்தைப் பிரித்து போர்த்திக் கொண்டிருந்தார். முகத்தில் பெருமிதமும் உதட்டில் புன்னகையும் தாண்டவமாட,

"குந்தளா" என்று ஆர்வத்துடன் என் இரு கைகளையும் சேர்த்துப் பிடித்தார்.

அங்கிருந்துதான் எனக்கு அம்மா திரிவான தைர்யம் வந்ததோ ஒரே திமறலில் என் கைகளை விடுவித்துக் கொண்டேன் அவர் பிடியிலிருந்து.

"என்னிடம் ஏன் இவ்வளவு வெட்கம்...?" என்று சொல்லியபடி என்னை அணுகினர்.

"தயவு செய்து விட்டு விடுங்கள்..." என்று பின் வாங்கியபடி திணறினேன்.

அவர் முகம் களையிழந்து. கட்டிலில் சோர்ந்து உட்கார்ந்தார். எதுவோ சரியில்லைஎன்ற ஓர் உணர்வு அவருக்கு உண்டாயிருக்கவேண்டும்.

"குந்தளா... காலையிலிருந்தே நீ களையிழந்திருக்கிருய், எனக்கு ஒன்றும் புரியவில்லை உன் மனம் நொந்திருக்கிறதெனத் தோன்றுகிறது. ஒரு வேளை... என்னை பி...டி...க்...க...வி...ல் ...லை...யா?" என்ருர் தயங்கியபடி, கரகரத்த குரலில், தங்களின் மனைவியிடம் கேட்கக் கூடிய கேள்வியா இது!

"அப்படியெல்லாம் ஒன்றும் கிடையாது ஆனல் ஆனல்... ஆனல்...

"சொல்லேன்" என்ருர்.

"தங்களின் குடுமி எனக்குப் பிடிக்கவில்லை. தோழியரும் பரிகசிக்கின்றனர். என் சினேகிதர்கள் முன் என் தலையை காட்ட கூச்சமாயிருக்கிறது என்றேன் வெட்கத்துடன்.

(தொடரும்)

கனவு பலிக்குமா!

—[ராஜலட்சுமி ராஜாராம்]—

(சென்ற இதழின் தொடர்ச்சி)

எனக்கும் உன் அம்மாவிற்கும் பரம திருப்தி உனக்கும் இஷ்டமிருக்குமென்று நினைக்கிறேன் நாளை உன்னைப் பார்க்க வருகிறார்கள் என்றார் நாராயணன்.

இதோ...வந்து அப்பா! என்று மெதுவாக ஆரம்பித்து தனக்கும் கோபுவிற்கும் ஏற்பட்ட பரிச்சயம் முதலியவைகளை ஆதி அந்தம் வரையில் சொல்லி, கோபுவிற்கு என்றோ தன்மனதை பறி கொடுத்து விட்டதாயும், அவனையே கல்யாணம் செய்துகொள்ள விரும்புவதாயும், வேறு யாரையும் மணக்க விருப்பமில்லை என்றும் திக்கித் தடுமாறி சொன்னாள்.

பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்த நாராயணன், ஆவேசத்துடன் இடி இடியெனச் சிரித்தார்...காதலாம் காதல். கண்ட கண்ட கதைகளை படித்து, கால்காசுக்குதவாத சினிமாக்களை பார்த்து காதல் கத்தரிக்காய் என்றெல்லாம் பேத்தாதே. வளர்த்த கடா மார்பில் பாயும் என்பார்கள். குழந்தை, குழந்தையென்று செல்லம் கொடுத்து வளர்த்ததற்கு நீ நடந்து கொண்ட விதம் ரொம்ப ஒழுங்காகத்தான் இருக்கிறது போகிறது, போகிறது என்று பார்த்தால் தலைமேலேயே கல்லை எறிவாய் போலிருக்கிறதே. யாரோ பொறுக்கிப் பயலாம் அவன் எனக்கு மாப்பிள்ளையாம். எவளோ சமையற்காரியாம் அவன் எனக்கு சம்பந்தியாவாளாம். நான் சென்ஸ் கோவிலுக்கு முகத்தை தூக்காமல் குதி நடைபோட்டுக் கொண்டு போகும் லக்ஷணம் இப்போதல்லவா தெரிகிறது. நீ இனி கோவிலுக்கும் போக வேண்டாம்—குடவாசலுக்கும் போகவேண்டாம். இந்த விநாடியிலிருந்து நீ என் உத்தரவின்றி வெளியே எங்கும் போகக் கூடாது. அந்த 'தரித்திர நாராயணநபர்' ஒருநாளும் இந்தநாராயணனின் மாப்பிள்ளையாக முடியாது. தெரிந்ததா? நான் பார்த்த பையனைத்தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். ரிஜக்ட் செய்ய ரீசனே கிடையாது. உன்னை லக்ஷியம் பண்ணிக்கேட்டதே என் தப்பு. எதுவும் என் இஷ்டப்படிதான் நடக்கவேண்டும். ஜாக்ரதை என்று கத்திவிட்டு கதவை படேரென்று திறந்து கொண்டு வெளியேறினார்.

தன் அப்பாவிற்கு இவ்வளவு கோபம் வந்ததை இதோ

பார்த்ததில்லை. தன அன்புத் தந்தையா இப்படி பேசியது, அதுவும் செல்லமும் சீருமாய் கண்ணுக்கு கண்ணாய் வளர்த்த தன் பெண்ணிடம். அவளுக்கு பயத்தில் ஒன்றுமே புரியவில்லை. தன் மனச்சுமை தீரும் வரை அழுதாள்.

என்னம்மா இதா! என்ன நடந்தது. உன் அப்பா அங்கு கோபமாயிருக்கார். நீயானு இங்கு அழுதுகொண்டிருக்கே. என்ன நடந்தது? கொஞ்சம் விபரமாகத்தான் சொல்லேன் என்று ஆத்திரத்துடன் கேட்ட அன்னையின் அரவணைப்பிலேயே விம்மியவாறு எல்லாவற்றையும் கூறினுள் கீதா.

உன் அப்பாவின் பிடிவாத குணம்தான், எல்லைத்தகராறும், தண்ணீர்த் தகராறும் போல் தெரிந்த விஷயமாயிற்றே. அவர் ஒன்று நினைத்தால் முடித்து விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பார், மேலும் உன் நன்மைக்குத்தானே சொல்கிருர். ஒன்றுமில்லாத அவனைக் கல்யாணம் செய்து கொண்டு, செல்வ சுகத்தில் வளர்ந்த நீ எப்படியம்மா குடித்தனம் பண்ணமுடியும். அப்பா இப்போது பார்த்திருக்கும் வரன் உனக்குஎல்லா விதத்திலும் ஏற்றது; தயவு செய்து மறுக்காதே என்ருள் கோமதி.

இதற்காகத்தானு உன்னிடம் சொன்னேன். நீயும் அப்பா கட்சிதானே அந்தக்காலத்தில் அப்பா கல்கத்தாவிலிருந்த போது, அவரைப் பார்க்காமல் கூட, தாத்தா, உன் கல்யாணத்தைபேசி முடித்து தாம் பூலம் மாற்றிக்கொண்டு வந்த போது, நீங்கள் பார்த்து எது செய்தாலும் சரி அப்பா என்று சொன்னவள்தானே இப்போது காலமே மாறிவிட்டதம்மா. முன் காலத்தில் எல்லோருமே நல்ல குணசாலிகள் பெரியவர்கள் கிழித்த கோட்டை தாண்டாமலிருந்தனர்; எல்லாம் நன்ருகவும் நடந்தது நன்மையாகவும் முடிந்தது. இப்போது நாங்களும் பல துறைகளில் முன்னேறி வருகிருேம். இணற்றுத்தவளையாக இல்லாமல், நாங்களும் படிக்கிருேம், பட்டம் வாங்குகிருேம், பல பல வேலைகளில் ஆண்களுக்கு சரி நிகர் சமானமாக போட்டி போடுகிருேம். சில ஆண்கள் இவைகளை விரும்புகின்றனர். ஆதரிக்கவும், ஊக்கவிக்கவும்முன் வருகின்றனர். சில முதலில்இவைகளை விரும்பி, மணம் முடிந்து வாழ்க்கைப் பாதையில் இறங்கும்போது வெறுப்பதோடு, தங்கள் மனைவிகளையும் வருந்தச் செய்கின்றனர். ஆகவேதான் நாங்கள் எங்கள் மனதை கவர்ந்தவுடன் பேசி, எங்கள் கற்புக்கு மாசு ஏற்படாதவாறு பழகி அவர்கள் மனதை நன்ருக புரிந்துகொண்டபிறகு மண வாழ்க்கையில் ஈடுபட்டால் மன அமைதியும், மகிழ்ச்சியும் உண்டாகும் என்று நினைக்கிருேம். இது தப்பா அம்மா?

பிறநாடுகளில், புற அழகிலும், ஆடம்பரத்திலும், ஆஸ்தி பாஸ்தியிலும் ஆசைப்பட்டு மணம் செய்து கொண்டு பிறகு பிடிக்காவிட்டால் ஒரு நிமிஷத்தில் விவாகு

ரந்து செய்துகொள்கிருர்கள். அதுபோல் பாரதநாட்டில் பிறந்து பாரத பண்பில் ஊறிய பத்தினிகள் ஒருக்காலும் செய்யமாட்டார்கள் அம்மா. தீர ஆலோசித்து முன்பே முடிவு செய்து அதன் பின்னர் தான் ஒருவனிடம் மனதை பறிகொடுப்பார்கள். எனக்குத் தெரிந்த வரையில்சொல்லி விட்டேன். அதற்குமேல் என்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய உன்பாடு, அப்பா பாடு என்று ஒரு சிறு பிரசங்கமே செய்துவிட்டு மாடியிலிருந்து தட தட வென்று கீழே இறங்கிப்போய் விட்டாள்.

அவள் கீழே இறங்கவும், நாராயணன் குடு குடு வென்று மாடிக்கு ஓடினர். சற்றுநேரம் கழித்து அம்மாவும் அப்பாவும் இடி இடி யென்று சிரித்துக் கொண்டே கீழே இறங்கி வந்தார்கள். அவர்கள் செய்கை சீதாவிற்கு எரிகிற தீயில் எண்ணெ வார்ப்பது போலிருந்தது. என் வாழ்வை வளமாக்க நான் கட்டியிருந்த கோட்டையைத் தகர்த்து தரை மட்டமாக்கியதோடு, இதை கொண்டாடி கொட்டம் மாளம் வேறு போடுகிருர்களே என்று நினைத்து முகத்தை உம்மென்று வைத்துக்கொண்டிருந்தாள்.

மறுநாள் வீடு அமளிதுமளிப்பட்டுக் கொண்டிருந்தது. காலையிலேயே வேலைக்காரர்கள் வீடு பூராவும் சுத்தம் செய்து துப்புறவாக வைத்திருப்பதில் ஈடுபட்டனர். சமையற்கார சங்கரன் கூட என்றும் போலில்லாமல் சுறுசுறுப்பாக ஓடியாடி வேலை செய்தான். பெரிய பெரிய ஆப்பிள் பழங்களும், ஆரஞ்சு, மாதுளை முதலிய பழவகைகளும் குளிர் சாதன பெட்டியில் குடியேறின.

சீதாவிற்கும் எதைப்பார்த்தாலும் எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. உணர்ச்சியின்றி நடமாடிக் கொண்டிருந்தாள்.

இவனுக்கு பதில் கோபு தன்னை பெண்பார்க்க வந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்? அவள் மனதை யாரோ கசக்கிப் பிழிவது போலிருந்தது. இனி ஏங்கி என்ன செய்வது? அப்பா பிடித்த பிடியை விடுவதாயில்லை. அம்மாவை நம்பி பிரயோஜனம் இல்லை. கடவுள் மனதிற்கு மதிப்புக் கொடுத்து ஏன் மனிதர்களைப் படைத்தார்? நாம் எதை மறக்க முயற்சி செய்கிருேமோ அதுதானே திரும்பத்திரும்ப ஞாபகம்வந்து சித்திரவதை செய்கிறது. எட்டாப் பழத்திற்கு கொட்டாவி விடுவதில் என்ன பிரயோஜனம்? ''அடுத்தது காட்டும் பளிங்கு போல், நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்'' என்ற வள்ளுவனர் வாக்கியப்படி, நான் எவ்விதம் என் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு பெண்பார்க்க வருபவர்கள் முகத்தில் முழிக்க முடியும்?

(தொடரும்)

M. KANNAN

Government Approved
Fabricator and Contractor

(Regd. 10)

30, Wall Tax Road, Madras-3

★

Please Contact Us For

COLLAPSIBLE GATES, MAIN GATES,
WINDOW GRILLS, VENTILATORS &
ALL OTHER BUILDING MATERIALS

★

Steel Trusses and erection works undertaken

Specialist in Arc and Gas Welding
Stainless Steel Aluminium Gas Cutting
Works are also undertaken.

OUR MOTTO IS TO

SATISFY OUR CUSTOMERS

நோயும் மருந்தும் அவளே

—[" ஞானியார் "]—

உயர் குலம் என்று சொல்லுகிறீர்களே அதில் நான் பிறந்தது என் குற்றமல்ல. உலகில் யாரிடமும் வைக்காத அன்பையும்—பாசத்தையும் உங்கள் மீது வைத்தேன். அன்பு விதை தூவி—நேசமெனும் நீர் பாய்ச்சிப் பாசமெனும் எருவிட்டு இதயத்தில் வளர்த்த காதல் எனும் செடியைக் கிள்ளி எறிந்து விடாதீர்கள் அத்தான்? என்ருள் லேடி டாக்டர். அவன் ஆவி பிரிந்தது.

"நீங்கள் தானே புதியராக வந்திருக்கும் பெண் டாக்டர்"

"ஆமாம்"

"வணக்கம்"

"வணக்கம். உங்களுக்கு என்ன வியாதி வாருங்கள் உள்ளே".

"எனக்கு ஒன்றுமில்லை. என் மகனுக்கு" என்ருர் தந்தை.

"அழைத்து வாருங்கள் உள்ளே" இவ்விதம் சொல்லி விட்டு உள்ளே நோயாளிகள் உள்ள அறைக்குச் சென்று விட்டார் டாக்டரம்மா லீலா.

மகன் பாலுவை உள்ளே கூட்டிவந்து பெஞ்சியின்மீது அமரச் செய்தார். தோற்றத்தில் பாலுவுக்கு வியாதி என்று யாரும் சொல்ல முடியாது. ஆனல் பருவக் காளை பட்ட மரம்போல் தோற்றமளிக்கிருனே! உண்மையில் அவன் உள்ளத்தில் ஏக்கம் நிறைந்திருந்தது உண்மை. அந்த ஏக்கம் அவன் உள்ளத்தை உருக்கியிருந்ததும் உண்மை. எம்மருந்தும் அவன் நோயைப் போக்காது. யாரால் அந்நோய் ஏற்பட்டதோ அவரால்தான் அதைப்போக்க முடியும் யார் அந்த நோயுக்குக் காரணம்!

சுற்றுமுற்றும் ஒருமுறை வைத்திய விடுதியை வெறிக்கப்பார்த்தான். என்ன நினைத்தானே? எழுந்தான், "அப்பா என்னை ஏன் இங்கு அழைத்து வந்தீர்கள்! உனக்கு என்ன? நன்ருகத்தானே இருக்கிறேன். நான் வீட்டிற்குச் செல்லுகிறேன். இந்த ஆஸ்பத்திரி என்ருலே எனக்குப் பிடிக்காது. ஒரே மருந்து வாடை. என்னல் பொருக்க முடியாது"—என்ருன் பாலு.

"நம் ஊருக்கு வந்திருப்பவர் ஒரு நல்ல மனோதத்துவ டாக்டர் சொல்லுவதைக் கேள் உன் வியாதியைக் குணமாக்கி விடுவார்" என்ருர் அப்பா.

"முடியாது அப்பா, முடியாது, என் நோயின் காரணத்தையே அறிய வைத்தியர்களால் முடியாதே. நான் வீட்டிற்குப் போகிறேன்" என்று கூறியபடி, எழுந்து வீட்டைநோக்கிப் புறப்பட்டான் பாலு.

பாலுவின் நிலைமையைக் காண வந்த டாக்டருக்கு நோயாளியைக் காணமல் திடுக்கிட்டார்.

மகன் நிலைமையை விளக்கினர் தந்தை:

"என் மகன் பாலு ஐந்து வருடங்களுக்கு முன் கல்லூரியில் பயின்றான். அதில் வெற்றி பெற்ற மகிழ்வைத் தன் நண்பர்களுடன் பங்கிட்டுக்கொள்ள சென்னை சென்றான். அதன் பிறகு அவன் முகத்தில் முன்பு இருந்த—வெற்றிக்களை இல்லாமல் போய்விட்டது. கல்லூரி திறந்தபின் அதற்குப் போகவுமில்லை. காரணமும் கூறவில்லை. அவன் கூறிய காரணம் ஒன்றுதான். 'பட்டம் பெற்று என்ன செய்யப் போகிறேன்' என்பதுதான். முழு நிலவு நாட்களில் வெளியில் சென்று ஓர் இடத்தில் அமர்ந்து கொண்டு, நிலாவைப் பார்த்துக் கொண்டிருப்பான். உடனே மயங்கிக் கீழே விழுந்து விடுவான். அதன்பின் பலநாட்கள் படுக்கையில், உணவும் சரியாக உண்ணமாட்டான். வாயில் ஏதோ ஒருவரின் பெயரை அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பான். ஆனால் சரியாகக் கேட்பதில்லை. நான் கேட்டாலும் சொல்லுவதில்லை. எப்படியும் நீங்கள் அவனைக் காப்பாற்றியாக வேண்டும். இந்த நிலை நீடித்தால் அவனுடைய உயிர் இருக்காது. அவன் நலம் தான் என் நலம்." எனக் கண் கலங்கக் கூறினர்.

"உங்கள் பையனைக் காண்பதற்குள் போய்விட்டாரே. சரிங்க பாலு என்பவர் சேலத்திலிருந்து படிக்கவந்திருந்தார். அவர்கூட நன்றுக்க் கதை கட்டுரைகள்கூட எழுதுவார். அவராக இருக்குமோ".

"ஆமாங்க டாக்டர். நாங்க சேலத்திலேதான் இருந்தோம். இப்பத்தான் வைத்தியத்திற்காக சென்னையே வந்து விட்டோம். உங்களுக்கு அவனை முன்னமே தெரியுங்களா".

இந்தக் கேள்வி டாக்டரம்மா லீலாவை ஒரு கணம் திடுக்கிட வைத்தது. இருப்பினும் சமாளித்துக்கொண்டு, "பாலு என்பவருக்கு, கல்லூரியில் நாவல் ஒன்று எழுதியதற்கு முதற் பரிசு கொடுத்துப் பாராட்டினர்கள். அப்பொழுது அவரைப்பற்றிக் கேள்விப்பட்டேன் அவ்வளவுதான். ஆனால் அவர்தான வேறு ஒருவரா என்பது தெரியவில்லை சரி நேரமாகிறது மாலையில் உங்கள் வீடு வந்து பார்க்கிறேன். வீட்டு எண்ணைக் குறித்துக்கொடுத்து விட்டுப்போங்கள்"—என்று கூறிவிட்டு உள்ளே சென்று விட்டார் லீலா.

* * *

"மிஸ்டர், இந்த மருந்தைக் கொஞ்சம் சாப்பிடுங்கள்"—என்று கூறியபடி மருந்தைப்

பாலுவுக்குக் கொடுத்தார் டாக்டரம்மா. ஆனால் அவருடைய கையும் இதயமும் ஏதோ ஒரு வித உள்ளுணர்வின் தூண்டலால் படபடத்தன.

பாலு ஒருமுறை வெறிக்கப் பார்த்தான். கண்களை பலமுறை சிமிட்டிப் பார்த்தான். திடீரென ஒரு ஆவலில் எழுந்து உட்கார்ந்தான். ஆனால் மீண்டும் தோல்வி ஏற்பட்டது அந்த ஆவலுக்கு! தன் போக்கில் அருகில் வைத்திருந்த நாவலை எடுத்தான். விரித்தான். முணுமுணுத்தான், 'லீலா உன் அழகு எங்கே நிலவின் அழகு எங்கே'', என்று. அப்பொழுது தான் டாக்டர் லீலாவுக்கு நோயின் காரணமும் காரணகர்த்தாவும் ஓரளவுக்குப் புரிந்தது மனோதத்துவ டாக்டரல்லவா?

டாக்டரம்மா, ஆஸ்பத்திரிக்குச் செல்லும் போது அணியும், கோட்டையும், கருப்புக் கண்ணாடியையும் அணிந்து கொண்டே வந்திருந்தார். எப்படியும் பாலுவை அந்நோயினின்றும் காப்பாற்ற வேண்டும், என்ற எண்ணமும் தன் மனோதத்துவத் திறமையை நடைமுறையில் பயிற்சி செய்யவும் ஆசைப் பட்டார் லீலா. ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக இன்னும் ஓர் காரணம் இருந்தது. அது என்ன?

''சார்...மன்னிக்கவேண்டும். இவருக்கு மனோ வியாதி தான் காரணம். கொஞ்சம் நிலைமை கவலைக்கிடம்தான். இந்த மருந்தை வாங்கி வந்து கொடுங்கள் உஷ்ணம் ஓரளவுக்குத் தணிந்து விடும். இவர் எந்தச் சூழ்நிலையில் மயக்கம் போட்டு விழுகிறாரோ, அந்தச் சூழ்நிலையை மீண்டும் ஏற்படுத்தவேண்டும். நாளை மறுதினம் பௌர்ணமியல்லவா? அப்பொழுது நான் எல்லா ஏற்பாடுகளோடும் வருகிறேன்.''—எனக்கூறிவிட்டு வெளியேறினார் லீலா.

* * *

ஐந்து ஆண்டுகளுக்கு முன் பாலு லீலாவுடன் கல்லூரியில் பயின்றவன். கல்லூரி ஆண்டு விழாவின் போழ்து நடைபெற்ற நாவல் போட்டியில், முதற் பரிசைத் தட்டிக்கொண்டான். ஆண்டுவிழா நாடகத்திற்கும் பாலுவே கதை எழுதி கதாசிரியன் என்ற முறையில் நாடகத்தில் பல நல்ல அம்சங்களைப் புகுத்தினான். அந்நாடகத்தில் முக்கிய பாகம் தாங்கி நடித்தவள் லீலா. அதற்குப்பரிசும் பாராட்டுதலும் கிடைத்தது. அதற்குப்பாலுவே முக்கிய காரணம் என்பதை உணர்ந்தாள் லீலா. அந்த நிகழ்ச்சி அவர்களுடைய தொடர்பை மேலும் வளரச் செய்தது. காலப்போக்கில் அது போதாகி—மொட்டாகி—காதல் மலராக மலர்ந்தது.

* * *

வீடு சென்ற லீலா டாக்டருக்கு வேறுவேலைகளே ஓடவில்லை. சலனமற்றுக் கிடந்த அவள் இதயத்தில் பாலுவின் சந்திப்பு ஒரு சலனத்தை உண்டாக்கிவிட்டது. கல்லூரியில் அவள் பயின்ற காலை எழுதிய

P. H. முகமது நஸீருத்தீன்

★

டால்மியா சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்

G I பைப் & பைப்

பிட்டிங்ஸ் வியாபாரம்,

இரும்பு சாமான்கள் தயாரிப்பவர்

★

பாலக்கரை ரோடு, திருச்சி-8.

தபால் பெட்டி நெ. 456

போன் : 786

தந்தி : HARDWARE

★

குறிப்பு:—

1/157, தஞ்சை ரோடு (அரிய மங்கலம் ஹமீதியா ரைஸ் மில் எதிரில்) சப் டிப்போவிலும் சிமெண்ட் டிலவரி செய்கிறோம்.

நாட்குறிப்பைத் தேடி எடுத்தாள். படித்துக் கொண்டே வந்தாள். ஓர் பக்கத்தில் அவளுடைய பார்வை நிலைத்து நின்றுவிட்டது. அப்படி என்ன் அதில் உள்ளது? அவளுடைய நினைவலைகள் வெகு வேகமாகப் பின்நோக்கி ஓடி...இறந்த காலத்தை நினைவு படுத்தத் தொடங்கின.

"பாலு"

"இம்..."

"பூர்ண நிலவு அவ்வளவு அழகா"

"ஆமாம். இல்லையெனில்; கடல் நிலவு நங்கையின் வருகையால் பொங்கியெழுந்து ஆரவாரம் செய்யுமா?"

"அப்படின்னு நீங்களும் சேர்ந்து கைதட்டுங்க"

"நீ கண்ணும்பூச்சி காட்ரயா? குறும்புக்காரி! நீ இவ்வளவு நேரமா ஏன் காக்க வைத்தாய். அதனாலேதான் உன்மேலே கோபம். உன்னையும் கோபப்படுத்தணும்னு தா அப்படிச்சொன்னே" என்று கூறியபடி அவள் கையைப் பிடித்து உட்காரவைத்தான் பாலு.

"அது சரி. நீங்க எப்பொழுதாவது நேரமே வந்து விட்டேன்னு சொல்லி இருக்கீங்களா?" என செல்லமாகக் கோபித்துக் கொண்டாள் லீலா.

"லீலா...என்ன அழ்கான இளந்தென்றல். வசந்த காலத்தின்—நிர்மலமான வானத்தில்

நிலவு தன்னொளியை எவ்வ ளவு வாஞ்சையோடு நம்மீது அள்ளித் தெளிக்கிறது பார்த் தாயா?"

"ஆம். ஆனந்தமாகத்தான் இருக்கிறது. நீலக் கடலில் மித ந்து வரும் தங்கத் தட்டுபோல் நம்மை நோக்கிப் பாய்ந்து வரு கிறது. ஆனாலும்..."

"என்ன லீலா ஆனாலும்..."?

"சுயமாக ஒளிவிட முடியவில் லையே, சூரியனிடமிருந்து பெற் றுத்தானே ஒளி வீசுகிறது."

"ஆமாம். உலகில் ஒவ்வொரு பொருளும் - ஏன் மனிதர்கள் கூட மற்றவர்களின் துணையால் தான் பொதுவாக வாழக்கை யில் மின்னுகிறார்கள். மண் ணிலே பொன்னும் - ஆழ்கட லில் முத்தும் - மலையில் சந்தன மும் அப்படியே இருந்தால். அதற்கு ஏது பெருமை? பொன் னும் முத்தும்பாட்டாளியின் கைபட்டு—முறையே கன்னிய ரின் கரத்திலே—கழுத்திலே தவழும் போதுதான் அதன் ஒளிஅதிகரிக்கிறது".

"ஏன் சந்தனத்தை விட்டு விட்டீர்கள்"

"உங்கள் இனம் அதிகமாக உபயோகிப்பதில்லையே என்று'

"உங்கள் ஆணினம் பூசிக் கொள்ளுகிறதே"

"ஆழமானதும் சுருக் கென்று தைக்கக் கூடியதுமான வார்த்தைகளைச் சொல்லுவதற் குப் பெண்ணுக்கு நிகர் யாரு மில்லை', நானே சந்தனத்தைப் பற்றிச் சொன்னால் தற்பெரு மை என்பாய் அதனால்தான் விட்டுவிட்டேன்"

"எப்படியும் பேச்சில் தப்பித் துக் கொள்ளுகின்றீர்களத் தான்" என்றுகூறியபடி செல்ல மாக பர்லுவின் கன்னத்தைத் தட்டினாள் லீலா.

"கள்ளம் கபடமற்றுப் பழகி விட்டோம். இந்த அன்பும் பாசமும் என்றும் நிலைத்து இருக்குமா? நீ மேல் படிப்புக்கு மேல் நாடு செல்லவிருக்கிறாய். ஐந்து வருடங்கள் உன்னைவிட்டு எப்படிப் பிரிந்திருப்பேன். உன்னை எண்ணாத நேரமில்லை. நினைக்காத வேளையில்லை. நானோ ஏழை எளியவன். நீயோ உயர்ந்தவள் நீ என்னுடன் வந்தால், உற்றாரும், பெற் றோரும் உதவாக்கரை என்று திட்டுவார்கள். நானே பெரிய மனோதத்துவ டாக்டராக வந்து விட்டால் உன்னை கொண்டா டும்; உலகம் போற்றும் அப் பொழுது நீ, நான் ஒருவன் இருப்பதையே..."

"மறந்துவிடுவாய், என்று தானே சொல்லப்போகின் றீர்கள். ஏனத்தான் உங்களு க்கு இவ்வளவு சந்தேகம். என் மேல் நாட்டுப் படிப்பை வேண் டுமானாலும் நிறுத்திவிடுகி றேன். நான் ஒன்றும் செல்வச் சீமாட்டியல்ல. சொல்லப்போ னால், தங்கக்கூட்டிலே அல்ல; இரும்புக்கூட்டிலே அடைத்து வைக்கப்பட்டிருக்கும் கிளி! வேளா வேளைக்குப் பாலும்

பழமும் வைத்துப் 'பருகு என் இச்சைக்கு உகந்த பச்சைக் கிளியே' என்ருல்; அக்கிளி தன் விருப்பம் போல் வெளியில் சென்று பழம் தின்னுவதைப் போல் இருக்குமா? அந்நிலே தான் எனக்கும். உயர்குலம் என்று சொல்லுகிருர்களே அதில் நான் பிறந்தது என்குற்றமல்ல. உலகில் யாரிடமும் வைக்காத அன்பையும்-பாசத்தையும் உங்கள் மீது வைத்தேன். ஏன்? உங்களிடம் உள்ள அன்பும்—கருணேயும் என்னேக் கவர்ந்ததால் அன்பு விதை தூவி—நேசமெனும் நீர் பாய்ச்சிப் பாசமெனும் எருவிட்டு இதயத்தில் வளர்த்த காதல் எனும் செடியைக் கிள்ளி எறிந்துவிடாதீர்கள், நீங்கள் தானே அடிக்கடி சொல்லுவீர்கள், 'அன்பு என்பது மாளிகை வாசிகளுக்கு மட்டுமல்ல; மண்குடிலில் வாழ்பவர்களுக்கும் உண்டு' என்று அது இப்பொழுது எங்கே அத்தான்" என அன்பு கொண்ட உள்ளம் அலறியது. கண்ணீர் அருவியாக மாறியது.

"இருக்கிறது கண்ணே! நிறைய இருக்கிறது. உன் அன்பைச் சந்தேகிக்கவில்லே. உனக்கு இருக்கும் உறுதி கூட எனக்கில்லாமல் போய்விட்டது, உன் தியாக உள்ளத்திற்காக பிரிவையும்—பொறுத்துக் கொள்ளுகிறேன். நீ மேல் நாட்டுப் பயணத்தை நிறுத்திவிடாதே. உள்ளத்தில் உயர்ந்த எண்ணமும் உறுதியும் இருக்கும்வரை நம்மையாரும் பிரிக்க முடியாது. நீ என்றும் என் இதயத்தில் இருப்பாய். இந்த மண்ணில் மறைந்தாலும், அதிலிருந்து வளரும் ஒவ்வொரு புல்லும் உன் நினேவு 'அன்புக்குப் பொருள் சொன்ன அருள் மங்கை' என்று எல்லோருடைய பாராட்டுக்கு மட்டுமல்ல—என் மகிழ்வுக்காகவும் படைக்கப்பட்டவள் நீ. இன்னுமா சந்தேகம். சந்தேகம் உயிரைப் பிரித்து விடும். அதற்கு மட்டும் இடம் கொடுத்து விடாதே லீலா. எங்கே... சிரி... அப்பாட இப்பொழுதுதான் நீ என் லீலா."

ஆனந்த மிகுதியால் அப்படியே தழுவிக் கொண்டாள் லீலா.

'சாதலும் வாழ்வும் அற்ற இடம்-அனுச்சஞ்சல மேனும் இல்லாத இடம்'—

என்ற பாடல் தென்றலில் தவழ்ந்து வந்து இரு இதயங்களிலும் பாய்ந்தது.

"லீலா...உன் நாட் குறிப்பைக் கொடு நான்தான் அதில் இன்று எழுதுவேன்," எனக் கூறி நிலவொளியிலேயே ஏதோ எழுதிவைத்தான்.

"போய் வரட்டுமா" எனக் கூறிய லீலாவையே பார்த்தான் பாலு. எரிந்து கொண்டிருக்கும் தன் வீட்டைச் சொந்தக்காரன் ஏதும் செய்ய இலாத நிலேயில், உட்கார்ந்து பார்க்கும் பார்வைக்கும் பாலுவின் பார்வைக்கும் அதிக வித்தியாசமில்லே. அப்படியே லீலாவின் மடிமீது மயங்கி விழுந்தான் பாலு.

* * *

லீலாவின் கையில் இருந்த நாட்குறிப்பு நழுவி அவன் மடி

குறைந்த விலை ! சிறந்த வேலை !

ஏ. டி. எச்.

டி ர ஸ ஸ்

(அரசாங்க உதவிபெற்றது)

16, அருணாசல நாய்க்கன் தெரு,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

நாங்கள் B & C துணிகளினால் அளவெடுத்தும், ரெடிமேடாகவும் குறைந்த விலையில் சிறந்த முறையில் குறித்த காலத்தில் ஆடைகளை தைத்துக் கொடுக்கிறோம்.

எங்களிடம் ஒருமுறை வருகைதந்து உண்மை உணருங்கள் !

உரிமையாளர்,

A. ஆறுமுகம். G. C. T.

மீது விழுந்தது. திடுக்கிட்டு எழுந்தான். கடந்தகால தூக்கத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கிறாயே என்று சுவர்க்கடிகாரம் 12 முறை அடித்து ஓய்ந்தது.

லீலா மேல் நாடு சென்றிருந்த போது பலமுறை கடிதங்கள் எழுதியிருந்தாள். ஆனால் பாலுவிடமிருந்து எந்த விதமானபதிலும் செல்லவில்லை. காரணம் அவன் கல்லூரியில் படிக்கவில்லை. அவள் பிரிவை நினைந்து நினைந்து உருகியவன் உணவுகூடச்சரியாக இல்லாமல் இருந்தான். தூக்கம் என்பது இல்லை. இதனால் அவன் உடல் மிகவும் மெலிந்து இருந்தது.

பூர்ண நிலவு நன்றாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. எல்லா ஏற்பாடுகளோடும் பாலுவைக் கூட்டிக் கொண்டு கடற்கரை மணலில் அமரச் செய்தார் டாக்டரம்மா. பாலுவை நிலவை நோக்கி உட்கார வைத்தார். அருகில் பழைய நாட் குறிப்பையும் வைத்து விட்டு, ‘ அப்படியே உட்காருங்கள். முழு நிலவைப் பாருங்கள். இதோ வந்துவிடுகிறேன்’ என்று கூறியபடி பின்னால் சென்று, கோட்டையும் கண்ணாடியையும் கழட்டி வைத்துவிட்டு பழைய

லீலாவாக பாலு முன்னுல் சென்ருள்.

''அத்தான் பூர்ண நிலவு அவ்வளவு அழகா''

''என்ன யார் நீ லீலா''

''ஆமத்தான். நான் உங்கள் லீலாதான்''.

''இல்லே! நான் காண்பது?

''இல்லே அத்தான் மேல் படிப்புக்குச் சென்ற லீலா உங்கள் முன் உட்கார்ந்திருக்கிறேன். ஏமாற்றி விட்டதாக நீங்கள் நினைத்த லீலா உங்களை உள்ளன் போடு ஏற்றுக் கொள்ள வந்திருக்கிறேன். என்னைப் பாருங்கள். ஏன் அப்படி விழிக்கின்றீர்கள்''—என்று பாலுவின் மோவாய் கட்டைத் தன் இருகரம் பற்றித் தன் பக்கம் திருப்பினுள்.

''இங்கே இருந்த டாக்டரம்மா எங்கே?

அது நான்தான் வேசத்தைக் கலைத்து விட்டேன் இதோ அன்று நீங்கள் எழுதிய நாட் குறிப்பு.

''முழு நிலவைப்போல் என்றும் வாழ்வோம்' ''ஆம். லீலா நீ எனக்குக் கிடைத்து விட்டாய் இன்றுபோல் என்றும் வாழ்வோம், லீலா...என உணர்ச்சிவசமாய் அப்படியே அவள் மீது சாய்ந்தான். அவ்வளவுதான். பேரானந்தத்தால் அவன் இதயம் அப்படியே, நின்றுவிட்டது.

''விடுங்கள் அத்தான்'' என அவன் கையை பற்றினுள். உயிர் இருந்தால் தானே!

''அய்யோ அத்தான். இதற்குத்தான என் முழு ஆராய்ச்சியைப் பயன்படுத்தினேன். வெற்றி பெற்ருல் நீங்கள் எனக்கு வாழ்க்கைத் துணைவர் என எண்ணினேனே உங்களை அடைய முடியவில்லையே அத்தான் வேதனையால் துடித்துக்கொண்டிருந்த என் உள்ளம் வெடித்து விட்டதே. அய்யகோ! நீங்கள் இன்றியான் யாருக்காக வாழவேண்டும். ஏ தென்றலே! நீ விஷக்காற்ருக மாறி என்னையும் அழித்துவிடு! அல்லது சஞ்சீவியாக மாறி அவரை எழுப்பிவிடு! இரண்டில் ஒன்றைச் செய். நீ செய்ய மாட்டாய். உயிர் குடிக்கத் தான். தெரியும் கொடுக்கத் தெரியாது. ''முழு நிலவைப் போல் என்றும் வாழ்வோம்'' எனத்தான் எழுதினீர்கள். உடனே மடிந்துவிடவா? இதோ அதையும் கிழித்து விடுகிறேன்''.

எனக்கூறி நாட்குறிப்பிலிருந்து அந்தக்காகிதத்தைக் கிழித்து எறிந்தாள் லீலா. தென்றல் புயலாக வீசத் தொடங்கியது. காகிதத்தை விரட்டி—விரட்டி அடித்துக் கொண்டு சென்றது, லீலாவும் நோக்கமின்றிப் பின் தொடர்ந்து ஓடினுள். ஓடிக்கொண்டே இருந்தாள். அவள் அலேந்து திரிகிருள். டாக்டராக அல்ல; சுய உணர்வு அற்று ஓடுகிருள் ஓடிக்கொண்டே இருக்கிருள்.

நடிகை நந்தினி

"மாமல்லன்"

யாருமற்ற பாவியாக திரிந்த நந்தினிக்கு நளினி என்ற நாடகத்தில் பிரதம பாகத்தில் நடிக்க சந்தர்ப்பம், சூழ்நிலை ஏற்படுகிறது. அதனில்கலந்து கொள்ள நேர்ந்த சர். ராமசாமிக்கு அவளின் பேரழகு ஈர்த்தது. அவளைத் தன் தியேட்டரில் நடக்கவிருக்கும் நாடகத்தில் ஒப்பந்தம் செய்துகொள்கிருர். அதற்கு கதாசிரியர் சாந்தலிங்கமும், நடிகன் பாஸ்கரும் தடையாக நிற்கின்றனர். இதனிடையில் லாட்ஜ் வேலையாள் ரத்னமும், நடிகன் சங்கரும் அவளைக் காதலிக்கின்றனர். நாடக ஒத்திகை நடக்கிறது. அவளால் ஒத்திகை தத்ரூபமாக செய்யமுடியவில்லை. ஒத்திகையில் நடிகன் ரவியை காதலனாக பிணைக்கின்றனர். அவன் அவளை ஒத்திகையின்போது கட்டியணைக்கத் தாவுகிருன் நந்தினி கோபாவேசத்துடன் தியேட்டரை விட்டு வெளியேறுகிருள், அவர்களை சபித்தபடி பிறகு நடப்பதென்ன......!

தியேட்டரை விட்டு வெளியேறியும், நந்தினி நிம்மதியாக தன் இருப்பிடத்திற்கு செல்ல முடியாத அளவில், காற்றும், மழையும், வெள்ளமும், வீதியை அமர்க்களம் செய்துக்கொண்டிருந்தது. அவள் ஏதாகிலும் வாடகைகார்கள் வருகிறதாவென்று நாலாபக்கமும் பரிதாபகரமாக பார்த்தாள்.

அச்சமயம் ஒருவாடகைகார் அங்கு வந்து நின்றது. அதிலிருந்து ரத்னம் கதவைத்திறந்தபடி, அம்மா எங்கு செல்கிறீர்கள் வண்டித் தேவையா என்ருன். ஆம் என்று சொல்லியபடி அவள் காரில் ஏற எத்தனிக்கும் போது, ரத்னம் அவள் தோள்பட்டையில் கை கொடுத்து லாவகமாக அவளை வண்டிக்குள் ஏற்றிக்கொண்டான். காரில் ஏறியவள் சீட்டின் கடைசியில் போய் உட்கார்ந்து இருக்கண்களையும் மூடியபடி பெருமூச்சு விடலாஞள். உள்ளம் சிதைந்து அவளின் மார்பகம் விம்மியபடியிருந்தது. பம்பாய் மெயில் என்பார்களே அந்த வேகத்தில் காற்ருய் பறந்தது அவளேறிச் சென்ற கார். காற்றும் மழையும் காரின் கண்ணுடியின் மீது அலைமோதிக்கொண்டிருந்தது. அவள் கண்களைத் திறந்தபோது, ரத்னம் அவள் பக்களில் இருப்பதை உணர்ந்தாள். கண்கலங்க உக்கிரமாக அவனைப் பார்த்தாள் நந்தினி. இளநகையுடன், அவளைக்கனிவாக, கொஞ்சுவதுபோல், இருந்தது, அவன் அவளைப்பார்த்த பார்வை.

உடலை நெளித்துக்கொண்டு சங்கோசத்துடன், நான் தங்க

ளுடன் வரலாமா, என்னுலான உதவியை செய்யக்காத்துக் கொண்டிருக்கிறேன், சொல்லுங்கள், என்ருன் ரத்னம். யாருடைய உதவியும் எனக்குத் தேவையில்லே, நீ யார், யாரென்று எனக்கு ஒன்றும் புரியவில்லேயே, என்ருள்; நந்தினி. நான் தெரியவில்லேங்களா, என்னே அடியோடு மறந்திட்டீங்களா, நான்தான் ரத்னம், கலேரசிகன் என்ருன். ஓஹீங்களா சரிசரி, எனக்கு மறதி அதிகம், காரை "யூசுப் லாட்ஜிக்கு" ஓட்டச்சொல்லுங்களென்ருள்.

கார் "யூசுப் லாட்ஜ்" போர்டீகோவில் வந்து நின்றதுதான் தாமதம், நந்தினி ஓட்ட நடையுடன் லாட்ஜில் தனக்கென்று ஏற்படுத்தியிருந்த அறையினுள் பிரவேசித்து, தோல் பையைத்திறந்து அதனில் வைத்திருந்த சிறு தாவணியைத் தடவினாள். அதனே யூகித்த ரத்னம், தன் கால் சட்டை ஜோபியில் வைத்திருந்த சிறு தாவணியை எடுத்து அவளிடம் நீட்டி இதனில் முகத்தைத் துடைத்துக்கொள்ளுங்கள் என்ருன். நந்தினிக்கு அதுசமயம் கண்ணீருகுத்த முகத்தை துடைக்க கைகுட்டை தேவையாகயிருந்தும் ஏனே அவள் மனம் வாங்க மறுத்தது, என்ன செய்வாள், அந்த செவ்விதழாள், வேறு வழியின்றி அதனே வாங்கி கண்ணீர் பிரவாகத்தால் நனேந்திருந்த முகத்தைத்துடைத்துக்கொண்டாள். நன்ருய் துடைத்துக்கொள்ளுங்கள், தாவணியைத் தாங்களேவைத்துக்கொள்கிறீர்களா என, புன்னகையுடன் சொன்னன், ரத்னம். எனக்கு இனி இதுத் தேவையில்லே என்றவள், அதனில் பதித்திருந்த அவனின் பெயரெழுத்தைக் கண்டு, வியந்து, இது உங்களுடையதா! என்னுடையதாசீசே, என்ருள்.

ஆமாங்க, தங்களுடையதாகயிருக்கலாம். அன்ெருரு நாள் தாங்கள் சிலோனிக் லாட்ஜில், சர். ராமசாமி அய்யாவோடு தங்கி உணவருந்தினீர்களே, அங்கே கிடந்தது. தங்களின் பொருள் தங்களிடமே தக்க சமயத்தில் வந்து சேர்ந்துவிட்டது என்ருன், ரத்னம். அவனே ஓரக் கண்களால் ஊடுருவிப்பார்த்து, இவன்முகத்தில்ராஜகளேசொட்டுகிறது, ஆணழகன், பேச்சிலும், நடையிலும்,பெருந்தன்மையும், தன்மானமுள்ளவனுகத்தோன்றுகிறது. ஆனுல் இவன் ஒருமுட்டாள், சந்தேகமே கிடையாது என்று நினேத்தாள், நந்தினி. அதே சமயம் தான் அவசரபுத்தியால் பொன்னுன வாய்ப்பை இழந்ததோடல்லாமல், சீமாட்டியாக விளங்கதேடிவந்த குருட்டு அதிர்ஷ்டத்தை இழந்ததை எண்ணி ஏங்கிஞள், ஏந்திழையாள். கண்ணீர் ஆருகப் பெருகியது. அவளாடைகள் தாருமாருக கலேந்து, அங்கங்கள், சிற்பிகளால் செதுக்கப்பட்ட பதுமைகளில் தெரிவதுபோல் தெரியலாயின. அவள் பித்தம் பிடித்தவள்போல் பிதற்றலாஞள். அவளின் செய்கைகளே கவனித்த ரத்னம், உடம்பென்ன செய்கிறதம்மா, குளிர்ந்தபானம் தருவிக்கிறேன் என்ருன் ஆறு

நகையுடன, அவள் மீது நாசுக் காய்உராய்ந்தபடி. சற்று விலகி ம்...ம் இன்னுமா யிங்கிருக்கிருய், 'எனக்கொன்றும் தேவையில்லை, 'நீ போகலாம் என்ருள் பித்தம் தலைக்கேறியவர்கள் பிதற்றுவதுபோல்.

•

நந்தினி பேச்சை முடிப்பதற்கும், லாட்ஜ் வேலையாள் கிரஷ் கொண்டு வருவதற்கும் சரியாக யிருந்தது. அதனை வாங்கி நந்தினியிடம் நீட்டியபடி, அம்மா ரொம்பவும் சோர்ந்திருக்கிறீர்கள். இதனை அருந்துங்கள்... என்று குழைந்தபடி சொன்ஞன், ரத்னம். அவனின் இதமான சொற்கள் அவளுக்கு ஆறுதலாக யிருந்தது. அவனைக் கூர்ந்துகவனித்து...ம்ம்... தாங்கள்தாம் எனக்கு சமய சஞ்சீவிமாதிரியாக தோன்றுகிறீர்கள்...நான் யாருமற்ற பாவியானேன் தங்களின் பரிவுக்காக வேண்டி சாப்பிடுகிறேன் என்று குளிர்ந்த பானத்தை குடித்தாள்...குடித்து சற்று நேரத்திற்கெல்லாம், அவளுக்கு உறக்க மயக்கம் தட்டவே, பக்கவாட்டிலிருந்த கட்டிலில் சாய்ந்தாள். தலையணிகள் தாருமாருக இருந்ததைக் கவனித்த ரத்னம் அவைகளை, அவள் தலைமாட்டிலும், கால்மாட்டிலும், பக்கவாட்டிலும், சரியாகப் பொருத்தி, இன்னும் ஏதாகிலும், ஏனுலான உதவி தங்களுக்குத் தேவைப்படுமா வென்ருன். தாங்கள் இங்கிருந்துபோனல் அதுவே எனக்கு பேருதவி செய்தமாதிரி மன்னிக்கவும் நான் ரொம்பவும் மனம் நொந்துள்ளேன் என்ருள் நந்தினி.

அப்படிச் சொன்ஞளே தவிர, அவனைப் பிரியமனமில்லாமல், கீழ்க்கண்ணுல் அவனின் சுந்தரவதனத்தை பார்த்து ரசித்துக்கொண்டிருந்தாள். அவளின் கண்ணீருகுத்த க்கண்களால் அவனை சரியாக நோட்டமிட முடியாமல் தவித்தாள்.

அம்மா தாங்கள் இம்மாதிரியான சோக நிலையிலுள்ளதைக் காண என் மனம் தாங்க மூடியவில்லை. ஏனம்மா இம்மாதிரி அல்லல் படுகிறீர்கள் என்ருன் ரத்னம். நீ யார் டிடெக்டிவ் ஆளா பின் ஏன்என்னைத் தொடர்ந்தாய் என்ருள் நந்தினி கரகரத்தக்குரலில். என்னம்மா என்னைப்பார்த்தால் டிடெக்டிவ் ஆள்மாதிரியா தோன்றுகிறது நான் டிடெக்டிவ் ஆளுமல்ல, லாட்ஜ் ஆளுமல்ல. நான் ஒரு ஆண்டியாரிடம் வேண்டுமாஞலும், எங்கு வேண்டுமாஞலும், எந்த வேலையும் செய்வேன் பணம் கொடுப்பவன் தான் என் எஜமானன். ஆனல் தங்களின் நடிப்பு, குயிலுக்கினிய குரல், நடனம். புன்னகையோடுக்கூடிய வதனம் என்னை ஈர்த்தது. தங்கள்வசம். எனவே தங்களுக்கு என்னுலானதைச் செய்ய ஆசைப்பட்டேன், சமயம் வாய்த்தது செய்துவிட்டேன், என்ருன் ரத்னம்.

இந்தக்கனிவான வார்த்தைகளை செவியுற்ற நந்தினி ஆம் இவன் ஆணழகன் மட்டுமல்ல, கலைரசிகனும், வாக்கு சாதுர்யமுள்ளவனும் கூட என நினைந்து தாங்கள் போகவேண்

தொழில்

(INDUSTRY)

(தமிழ் மாத மிருமுறை)

போன் : 31738. தந்தி : மெரிகோல்ட்

விளம்பர விகிதம்

★

கடைசி மேல் அட்டை	3 கலர்	...	175	0	0
,,	2 கலர்	...	125	0	0
,,	கலர் இல்லாமல்	...	100	0	0
,,	உள் பக்கம்	...	75	0	0
உள் பக்கம்	1 பக்கம்	...	50	0	0
,,	½ பக்கம்	...	30	0	0
,,	¼ பக்கம்	...	20	0	0

குறிப்பு:—ஆறு மாதத்துக்கு மேல் காண்ட்ராக்ட் விளம்பரம் தருபவர்களுக்கு கட்டணச் சலுகைகள் உண்டு.

டாம் காற்றும் மழையும் ஆருகப் பொழிகிறது தாங்கள் இங்கேயேத் தங்களாமென்ருள்.

சர். ராமசாமியிடம் சொல்லிக் கொள்ளாமல் வந்ததற்கு மனம் நொந்து ஏங்கிஞள். மனம் புழுங்கியது. தன்னேயே தஞ்சமென்று நம்பி விவாகம் செய்துக் கொள்ள வாக்களித்தவருக்கு துரோகம் செய்ததை எண்ணி, எண்ணி, ஏக்கமுற்ருள். கண்ணீர் ஆருகப் பெருகி அவளின் மேலாடைகள் நனேந்துப் போயிற்று.

ரத்னம், நந்தினியின் வதன பிம்பங்களே ஊடுருவிப்பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்ணுற்ற நந்தினி, ஆடலரசன் என்ன அழகு, இவனுக்கு இணே இவனே தான். ஏன் இவனே நம் நாடகத்தில் காதலஞக ஒத்திகை செய்யக்கூடாது, என நினேந்து ரத்னம், இங்கே வா, என்பக்கலில் உட்காருங்கள், தாருங்கள் எனக்கொரு முத்தம், உங்கள் செவ்விதழ்களால். ஏன் தயக்கம் தயங்காதீர்கள், நான் ஒரு நடிகை எனக்கு யாதொரு வித்தியாசமும் இடையாது. தாங்கள்யாராக விருந்தா

லும் கவலைப் படாதீர்கள், தங்களோடு தான் நாடக ஒத்திகை நடத்துவேன்...சரி என்று சொல்லுங்கள் என்றாள், நந்தினி.

சர்க்கரைப்பந்தலில்தேன்மாரி பொழிந்தால் எப்படியிருக்கும் ஆனந்தம் கொள்ளவில்லை, ரத்னத்திற்கு. குழந்தைகள் தாயிடம் கொஞ்சி முத்தம் கொடுக்குமே... அம்மா திரியாக குழைவான சிரிப்புடன் அவளைலாவகமாக அணைத்து அவளின், செவ்விதகழ்களிலும், கொவ்வை பொத்த கன்னங்களிலும், வகை, வகையான, முத்தங்கள் ஈந்தான். நந்தினி அவனின் அணைப்பினால் உடல் முழுதும் மின்சாரம் ஷாக் ஏறியது போல் புளங்காகிதமடைந்து அவனை மறுமுறை மார்புரத் தழுவியபடி, ரத்னம், இனிநீயல்லால் எனக்கு உலக சுகம் கிடையாது, சிலோனிக் லாட்ஜில் உம் பேரழகைக் கண்டு சொக்கிப்போனேன். நீ ஒருவேலையாளாய் தோன்றினாய் அன்று, இன்று தான் உணர்ந்தேன், அத்தான்நீங்கள் ஓர் கலை ரசிகர் என்று, அதிலும் என் அன்பையும் மதிப்பையும் ஹூம் ஹூம் ஏன் என் இதயத்தையும் கொள்ளைக்கொண்ட கள்வன் என்று, என்ன யோசிக்கிறீர்கள் ஓ ஓ நான் ஒரு சீமானின் இல்லை இல்லை சந்தர்ப்பம் சூழ்நிலை என்னை அவரோடு இணையச் செய்தது. வயோதிகரோடு நான் என்ன சுகத்தைக் காண முடியும்... செல்வத்தையும் செல்வாக்கையும், புகழையும் தவிர. தங்களிடமோ அன்பு, அணைப்பு, ரசிக்கும்திறன், நடிக்கும் திறன், எல்லாம் உள்ளது. ஏன் தயக்கம் கவலைப்படாதீர்கள் தங்களுக்காக ஏதும் செய்யத்தயார் ஆனால் தாங்கள் லாட்ஜ் வேலைக்கு முழுக்குப் போட்டு விடுங்கள், நாம் இருவரும் இணைந்து நடிக்கலாம், நாடகத்தில் மாடப்புருக்கள்போல பறக்கலாம் நாடக உலகில் என்று சொல்லி அவனை அணைத்தபடி விக்கி விக்கி அழுது கண்ணீர் உகுக்கலானாள்.

ரத்னம் அவளை உச்சிமோந்து ஏன் அழுகிறாய் கண்ணே, கோழையைப்போல நான் எதற்கும், எவர்க்கும் அஞ்சேன் என்றும் தாயராகஇருக்கிறேன் உன் அன்பும், ஆதரவும், இன்றுபோல் என்றும்மாறாமல் இருந்தால் போதும், எட்டாத கனி எட்டி தானாக என்வாயில் விழுந்துவிட்டது எனக்கு இன்னும் என்னத் தேவை ம்ம்... ஏன் கவலைப்படுகிறாய். கண்ணே படுத்துறங்கு ...மனது சாந்தியடையும் நான் போய் வருகிறேன், நாளைக் காலை சந்திக்கிறேன் என்று சொல்லியபடி அவள் கன்னத்தில் "இச்" என்று முத்தம் கொடுத்தான், ரத்னம். அதுசமயம் சிவபூஜையில் கரடி புகுந்த மாதிரி, அறையினிலுள்ள காலிங் பெல் அடித்தது.

(திரை)

●

டப்ளின் நகரில் 1958ம் ஆண்டு ஒரு ஒட்டப்பந்தயம் நடந்தது. 5 பேர், பந்தயத்தில் பங்கு கொண்டார்கள் ஆஸ்த்திரேலியாவைச் சேர்ந்த ''ஹெர்ப் எலியட்'' என்பவர், ஒரு மைல் ஓட்டப்பந்தயத்தில் 3 நிமிடம் 54-5 செக்கண்டில் ஒருமைல் ஓடி முடித்து ஒருதனி உலக ரிகார்டை ஏற்படுத்தினர். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ''மெர்வ் லிங்கன் என்பவர் இரண்டாவதாக வந்தார்.

உலகத்தில் உற்பத்தியாகும் வைரம், கிட்டத்தட்ட ஆண்டொன்றுக்கு 5 டன்ருகும். வைரம் அழகுக்கு மட்டும் உபயோகிக்கப் படவில்லை. ஆக்க வேலைக்கும் வைரம் உபயோகிக்கப் படுகிறது.



ஆஸ்திரோ ஹங்கேரியின் ஏகாதிபத்தியப்பிடியில் இருந்து ஹங்கேரியை விடுதலை செய்ய ஒரு புரட்சி நடந்தது; அந்த புரட்சியில் முக்கிய பங்கு கொண்டவர் ''லாஜேஸ் கோவிரத்'' என்பவராவர். அவர் நாடு கடத்தப் பட்டார். அவரை கௌரவிக்க, அவர் ஞாபகர்த்தமாக அமெரிக்காவில், விசேஷ தபால் பில்லைகள் வெளியிடப் பட்டுள்ளது. ''சுதந்திர வீரன்'' என்ற தலைப்பின் கீழ் அந்த தபால் பில்லை வெளிவருகிறது.

—✻—

பிறருக்கு சுதந்திரத்தை மறுக்கின்றவர்கள் சுதந்திரத்திற்கு அருகதையற்றவர்களாவர். பாரபட்சமற்ற கடவுளின் கீழ் அத்தகையவர்கள் சுதந்திரத்தை நிலைத்து வைத்துக்கொள்ள இயலாது.

—லிங்கன்.

பட விமர்சனம்:

நாட்டுக்கொரு நல்லவள்

டைரக்ஷன்: தசரதராமையா.

தயாரிப்பு: மெஜஸ்டிக்பிக்சர்ஸ்.

கதைவசனம்: இரணியல்ரவி.

இசை அமைப்பு: மாஸ்டர் வேணு.

முக்கிய நடிகர்கள்: எஸ், எஸ். ராஜேந்திரன், டி. எஸ். பாலையா, சகஸ்ரநாமம், பீர் முகம்மது, மோகன், பண்டரிபாய், விஜயகுமாரி, காமினி.

வீண் பிடிவாதம் செய்தல்—வெறுப்புணர்ச்சிக்கு அடிமையாகுதல்—வரட்டு கௌரவம்—சிந்திக்கத்தவறுதல் -- ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு பின்னப்பட்டக் கதைதான் நாட்டுக்கொரு நல்லவள்.

சுந்தரம்பிள்ளை, முத்தையா பிள்ளை, ராமையா பிள்ளை ஆகிய மூவர்களும், ஒற்றுமை என்ற கயிறினால் நன்குபிணைக்கப்பட்டவர்கள். ஒரு நாரில் இணைக்கப்பட்ட மலர்கள்தான் இம் மூவர்களும்.

மலர் இருக்கவேண்டிய இடத்தில் இருந்தால்தான் மலரும் மணம் வீசும்; ஆனால், ஒரு நாரில் பிணைக்கப்பட்ட இந்த 3 மலர்களும், ஒரு குரங்கின் கையில் அகப்பட்டது; மலர்கள் கசக்கப்பட்டன; மூன்று மலர்களும் சிதறி சின்னாபின்னமாக்கப்பட்டது. புயல், சூறாவளியின் கோரதாண்டவத்திற்கு பலியானதுஇந்த 3 மலர்களும்; மலர்கள் பிரித்தெறியப்பட்டாலும், பின் மலர்கள் ஒன்று சேர்க்கப்படுகின்றன. இதுதான் கதையில் பொதிந்து கிடைக்கும் கருத்து.

இந்த படத்தில், பின் தங்கிய வர்கள் வாழ்க்கையை நன்கு சித்தரிக்கப்பட்டிருப்பது பாரா ட்டத்தக்கது. சிறு தகராறுகளை பெரிதாக்கி கோர்ட்டுக்குச் சென்று, பணத்தைப் பாழாக்கு பவர்கள் நம்மத்தியில் இருக்கி ருர்கள். அவர்கள் அத்யா வசியம் இந்த படத்தை பார்க்க வேண்டும். கோர்ட்டுக்குச் செல்லும் குடும்பம் சின்னபின்னமாக்கப்பட்டுச் சிதறிப்போவதை இப்படம் நன்கு எடுத்துக்காட்டுகிறது.

நடிப்பு

கதாநாயகனுக நடித்துள்ள எஸ். எஸ். ராஜேந்திரன், வழக்கம்போல் நடிக்கிருர். முன்னேற்றம் மிக, மிக தேவை. படத்திற்கு உயிர் ஊட்டுபவர் யார் என்று ஒருகேள்வியை எழுப்பினுல், அக்கேள்விக்குப் பதிலாக "நான் தான்" என்று கூறுகிருர் பாலையா. பாலையாவின் நடிப்பு படத்திற்குப்படம் நல்ல முன்னேற்றம்காணப்படுகிறது. விஜயகுமாரி தன் திறனை நன்கு காட்டியுள்ளார். குறும்புக்காரியாகவும், சிறந்த மதி படைத்தவளாகவும், விஜய குமாரி நடித்து, ரஸிகர்கள் மத்தியில் "சபாஷ்" வாங்குகிருர். பீர்முகமது நடிப்பு சுமாராக இருக்கிறது. காமினி மோகன் ஆகியவர்கள் நடிப்பில் உயிர் இல்லை. விறு விறுப்பு வெண்டும். பண்டரிபாயும், சகஸ்ரநாமமும் நன்கு நடித்துள்ளார்கள்.

தசரதராமையாவின் டைரக்ஷன், இன்னும் நல்லமுறையில் கவனம் செலுத்தப்பட்டிருக்கலாம்; டைரக்ஷனின் கவனக் குறைவு, படத்தின் மூலம் நன்கு தெரியவருகிறது. இரணியல் ரவி எளிய முறையில் கதை வசனம் அமைத்துள்ளார். இரண்டு மூன்று பாட்டுக்கள், செவிக்கினிமையாக அமைந்துள்ளன. "நாட்டுக்கொரு நல்லவள்", நாட்டுக்குஉண்மையிலே நல்லவள் தானு என்று தெரிய ஒருமுறை பார்க்கலாம்.

—※—

"சிவாஜியும் வைஜயந்தியும்"!

நடிகதிலகம் சிவாஜி கணேசனும், வைஜயந்தியும், சேர்ந்து நடிக்கும் படம் ஒன்றை ஜெமினி தயாரித்துள்ளது. ஜெமினியில் தமிழ் ஹிந்தி ஆகிய இரு மொழிகளில் தயாராகி வரும் இப்படத்தின் பெரும்பகுதிக் காட்சிகள் முடிவடைந்து விட்டதாம்.

சிவாஜி கணேசன், தங்கவேலு, வைஜயந்திமாலா, சரோஜாதேவி, பண்டரிபாய் ஆகியோர் தமிழிலும், திலிப்குமார், ராஜ்குமார், வைஜயந்திமாலா, சரோஜாதேவி, பண்டரிபாய், மினுமும்தாய் ஆகியோர்கள் ஹிந்தியிலும் நடித்துள்ள இந்தப் படம் அடுத்தமாதம் திரைக்கு வருமென எதிர்பார்க்கப் படுகிறது.

"நடிகை பத்மினிக்குத் திருமணம்"!

பிரபல நடிகை பத்மினிக்கு அடுத்த ஆண்டில் திருமணம் நடைபெறும் என்று தெரிய



டி. எஸ். பாலையாவின் புதல்வி திருமணம்

பிரபல சினிமா நடிகர் டி. எஸ். பாலையாவின் புதல்வி துர்க்கா லட்சுமிக்கும், ஓய்வு பெற்ற போலிஸ் அதிகாரியின் மகன் துரைராஜ் அவர்களுக்கும் 9-7-59ல் சென்னையில் உள்ள அப்பரி மாளிகையில் கோலாகலமாக திருமணம் நடைபெற்றது. சினிமா நடிக நடிகைகள் வருகை தந்து திருமணத்தை சிறப்படையச் செய்தார்கள். சென்னை நிதிமந்திரி சி. சுப்பிரமணியம், மணமக்களோடு நின்று கொண்டு புன்முறுவல் செய்வதைப் படம் காட்டுகிறது.

வ்ருகிறது. எழிலரசி பத்மினியின் கணவர் யார்? என்பது இன்னும் திட்டவட்டமாகத் தெரியவில்லை; பத்திரிகை ஆசிரியர்கள், அவர் வீட்டிற்குப் பலமுறை படை எடுத்தும், ''தன்னைத் தொட்டு தாலி கட்ட வரும் கணவர்யார்?'' என்று பதில் கொடுக்க அவர் மறுக்கிறார், ''மூடி மறைக்கும் இந்த மந்திரம் எத்தனை நாள் நீடிக்கும். சீக்கிரம் ''படார்'' என்று வெடித்து விடாதா! அப்போது நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்'' என்று பத்திரிகை ஆசிரியர்கள் மனதைப் பக்குவப்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். இது ஒருபுறம் இருக்க ரசிகர்களின் ஆர்வம் கட்டுக்கடங்காமல் கரைபுரண்டோடுகிறது.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகி விட்டது. அடுத்த ஆண்டின் பிற்பகுதிக்குள் பத்மினி திருமணம் புரிந்து கொண்டு குடும்பத்திலீடுபட்டு விடுவாரென்று நிச்சயமாகிவிட்டது.

"நாட்டிய நடிகை கமலா யாரை மணப்பார்"?

நாட்டிய நடிகை கமலா ஏற்கனவே திருமணமானவர். பிரபல நடன நட்சத்திரமும், பம்பாய் "டைம்ஸ் ஆப் இந்தியா" கார்டூன் சித்திர நிபுணருமான திரு. ஆர். கே. லட்சுமணனை கணவனாகக் கொண்டவர் தான் கமலா லட்சுமணன். இரண்டு பேர்களும் சதிபதிகளாக இருந்த போதிலும், கமலா, லட்சுமணனோடு, நீண்ட நாட்களாக வர்ழவில்லை. இப்போது ஆர். கே. லட்சுமணனை விவாகரத்து செய்துவிட்டு, பிரபல நடனக்காரரான கோபி கிருஷ்ணாவை கமலா மணக்கப் போவதாக செய்தி வெளி வந்துள்ளது. டைரக்டர் சாந்தாராம் தயாரித்து வெளியிட்டுள்ள உலகப் புகழ்பெற்ற "ஜனக் ஜனக் பாயல் பாஜே" என்ற ஹிந்திப்படத்தில் நடனமாடி மங்கா புகழ்பெற்ற நாட்டிய நடிகர்தான் கோபிகிருஷ்ணா என்பது குறிப்பிடத்தக்கது.

"கல்யாண பரிசு" 100-வது நாள் வெற்றி விழா

வீனஸ் பிக்சர்ஸ் வெற்றித் தயாரிப்பான கல்யாணப் பரிசு படத்தின் நூறாவது நாள் வெற்றி விழா தென்னிந்தியாவில் ஏழு இடங்களில் கொண்டாடப்பட்டது. ஜெமினி, சரோஜாதேவி, தங்கவேலு, எம். சரோஜா, டைரக்டர் ஸ்ரீதர். ஆகியோர் கீழ்க்கண்ட இடங்களில் மேடையில் தோன்றினர்கள்.

17-7-58 பெங்களூர், 18-7-59 சேலம், ஈரோடு, 19-7-59 கோயமுத்தூர், 20-7-59 மதுரை 21-7-59 திருச்சி.

சென்னையில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருப்பதால் 25-வது வாரம் அல்லது 200-வது நாள் கொண்டாடுவர் என தெரிகிறது.

வீனஸ் பிக்சர்சார் எடுத்த மூன்று படங்களான அமரதீபம், உத்தமபுத்திரன், கல்யாணபரிசு, 100 நாட்களுக்கு மேல் ஓடினது என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரை மன்னன்

15-7-59 அன்று சென்னை நெப்ட்யூன் ஸ்டுடியோவில் காலை 7 மணிக்கு மனோகர் பிக்சர்ஸ் மதுரை மன்னன் படத்துக்கு திரு. ஏ. எல். எஸ். காமிராவை முடுக்கினர். எஸ். ஏ. நடராஜன், தாம்பரம் லலிதா நடித்த காட்சிகள் படமாக்கப்பட்டன. சி. எச். நாராயண மூர்த்தி டைரக்ஷனில் உருவாகும் இக்கதை நீதிபதி புகழ் சோலைமலை எழுதியது. இசை ஜி. ராமநாதன், மற்றும் ஜூபிடர் புதுமுகம் ராமநாதன், சரோஜாதேவி, தங்கவேலு, எம். சரோஜா நடிக்கின்றனர்.

பல் வியாதிகளை பறந்தோடச் செய்யும்

டாக்டர் கோட்டீஸ்

முயல் மார்க் பயோரியா பற்பொடி

ரிஜிஸ்டர்டு

எல்லா கடைகளிலும் கிடைக்கும்



DR.KOTI'S PYORRHEA TOOTH POWDER

டாக்டர் கோட்டீஸ்

இண்டியன் கெமிக்கல் ஒர்க்ஸ், சென்னை-5

போலிகள் ஜாக்கிரதை!

நெம்பர்களைக் கண்டு ஏமாருதீர்கள்.

களத்தூர் கண்ணம்மா

ஏ. வி. எம். ஸ்டுடியோவில் அண்மையில் பூஜை செய்யப்பட்ட களத்தூர் கண்ணம்மாவில் ஜெமினி கணேசன், சாவித்திரி, தேவிகா, பாலையா, தாம்பரம் லலிதா, ராஜகோபால், டெய்சி இராணி முதலியவர்கள் நடிக்கின்றனர். ஜாவர் சீதாராமன் கதை வசனம் எழுதும் இப்படத்தை பிரகாஷ்ராவ் டைரக்டர் செய்கிறார். இதன் இசையமைப்பாளர் சுதர்சனமாகும்.

நாக நந்தினி

பி. வி. என். புரொடக்‌ஷன்சின் நாகநந்தினி ஏ. வி. எம்மில் வளர்கிறது. பாலாஜி, வீரப்பா, ராஜகோபால் ஜாவர் சீதாராமன் முதலியோர் நடிக்கும் இப்படத்தை ரகுநாத் டைரக்‌

செய்கிறார். இதன் கதையை ஜாவர் சீதாராமனும் வசனத்தை திலகம் நாராயணசாமியும் எழுதியுள்ளனர். சுதர்சனம் இசையமைக்கிறார்.

—❋—

நடிப்புத் திறமை!

நடிப்பையே தொழிலாகக் கொண்ட நடிகர்கள் கஷ்டமான சட்ட சம்பந்தமான பாத்திரங்களை ஏற்றுச் சிறப்பாக நடிப்பது குறித்து பாஸ்டன் நகரின் பிரபல வழக்கறிஞர் ஜோசப் என். வெல்ஷ் பெரிதும் வியப்படைந்துள்ளார். "கொலையில் கதை" (Anatomy of Murder) என்ற பெயரில் ஆட்டோ பிரமிங்கர் தயாரிக்கும் படத்தில் வெல்ஷ் நடிக்கிறார்; தம் நடிப்பு அனுபவத்துக்குப் பின்பு, அவர் தொழில் முறை நடிகர்களின் திறமையை மேற்கண்டவாறு பாராட்டினார்.

அமெரிக்காவில் தலைசிறந்த வழக்கறிஞர்களில் ஒருவர், வெல்ஷ். ராணுவம் மக்கார்த்தி விசாரணைகளில் அவர் ஆஜராகி வாதாடிப் புகழ் பெற்றவர். அவர் மேற்சொன்ன படத்தில் ஒரு நீதிபதி பாத்திரம் ஏற்று நடிக்கிறார். தாம் தயக்கத்துடன் பயந்து கொண்டே நடித்ததாக அவர் கூறினார். "வழக்கறிஞர், நடிகர் என்று இரு துறைகளிலும் என் அந்தஸ்தை என் நடிப்பு குறைத்து விடும் என்றே நான் நினைத்தேன்" என்றார் வெல்ஷ்.

படத்தில் தம் பாத்திரத்தை நடித்து முடித்த பின்பு "தொழில் முறை நடிகர்களின் திறமை கண்டு உண்மையிலேயே நான் பெரும் வியப்புற்றேன்" என்று அவர் கூறினார்.

ராபர்ட் டிராவர் எழுதிய—ஏராளமாக விற்பனையாகும் நாவல்தான் "கொலையின் கதை", கதை நிகழ்ந்ததாக வரும் இடங்களில் மிஷிகன் ராஜ்யத்தின் வடக்குப் பகுதியில் படம் முழுதும் தயாரிக்கப் பட்டது.

எதிரியில் வழக்கறிஞராக ஜேம்ஸ் ஸ்டிவர்ட் நடிக்கிறார். அவர் நடிப்பைப் பற்றி வெல்ஷ் குறிப்பிடுகையில், "அவர் வெகு விரைவில் நீதிமன்ற நடையுடை பாவனைகளை மேற்கொண்ட விதம் என் நெஞ்சை விட்டு அகலாது; அந்த நடையுடை பாவனைகள் எனக்கு வர வாழ்நாள் முழுதும் பிடித்தது" என்றார்.

தொழில் முறை நடிகர்களுடன் ஒப்பிடுகையில் தாம் ஒரு 'கன்றுக்குட்டி' என்ற எண்ணம் வெல்ஷ் மனதில் நிலைத்து விட்டது போலும்! "படப் பிடிப்பு அல்லாத நேரங்களில் நடிகர்கள் தம் பாத்திரங்களை மறந்து விடும் தன்மையும் எனக்கு வியப்பளித்தது. நீதிமன்றத்தில் ஸ்டிவர்ட், ஜார்ஜ் ஸ்காட், புரூக்ஸ் வெஸ்ட் ஆகியோர் தோன்றும் போது அவர்கள் சட்ட அறிஞர்களாகவே விளங்கினர் எனலாம். ஒரு படப் பிடிப்புக்குப் பின்பு நாங்கள் சந்தித்தபோது, அவர்கள் வாழ்க்கைப் பற்றி. விவாதிக்காதது கண்டு எனக்குப் பெரி

கதை நிகழ்வது கப்பலில்; படம் உருவானது கடலில்

''கடைசிப் பயணம்'' என்ற ஆங்கிலப் படத்தின் கதை முழுவதும் ஒரு கப்பலில் நிகழ்கிறது. காட்சிகள் அனைத்தும் கடலிலேயே படமாக்கப் படுகின்றன. படத்துக்காக 44,000 டன் எடையுள்ள ஒரு கப்பல் கடலில் மூழ்கடிக்கப்படுகிறது. உண்மையில் அதுவே அக்கப்பலின் கடைசிப் பயணம்!

''கடைசிப் பயணம்'' (The Last Voyage) என்ற ஆங்கிலப் படத்தின் கதை முழுவதும் கப்பலிலேயே நிகழ்கிறது. 44,000 டன் எடையுள்ள ஒரு கப்பல் இக் கதையைப் படமெடுக்கப் பயன்படுத்தப்பட்டது. முன்பு அட்லாண்டிக் ராணியாக விளங்கிய ''ஐல்-டி-பிரான்ஸ்'' என்ற கப்பல்தான் அது. பயணத்துக்கு லாயக்கில்லை என்று பழைய இரும்பாக உடைப்பதற்காக ஒஸாக்கா நகரிலுள்ள ஒரு ஜப்பானிய இரும்பு வியாபாரியிடம் அது கிடந்தது. அதை வெளியே எடுத்துப் படம் எடுக்கப்பட்டது. உண்மையில் படத்தில் அக்கப்பல் தோன்றுவதே அதன் 'கடைசிப் பயணமாக' இருக்கும். படத்தில் கடைசிக் கட்டத்தில் அக் கப்பல் தண்ணீரில் மூழ்கி விடுகிறது. ஆழமில்லாத கடலில் அக் கப்பல் மூழ்குமாறு செய்யப்படுகிறது. அப்படியானால்தானே படப் பிடிப்புமுடிந்த பின்பு அதை வெளியில் எடுத்து, உடைத்துப் பழைய இரும்பாக்க முடியும்?

———

தும் வியப்பு ஏற்பட்டது. ஏனெனில் ஒய்வு நேரத்தின் போது பெரும்பாலான வழக்கறிஞர்கள் வழக்கைப் பற்றியே பேசுவது வழக்கம். நடிகர்களது நடிப்புத் திறமையை உண்மையிலேயே நான்போற்றுகிறேன். என் கண்களுக்கு அவர்கள் உண்மை வழக்கறிஞர்களாகவே தாம் காட்சியளித்தனர்'' என்றார் வெல்ஷ்.

படத்துக்காக அக்கப்பலுக்கு ''எஸ். எஸ். ஒலிம்பஸ்'' என்று புதிய பெயர் சூட்டப் பெற்றது.

கடலில் எடுக்கப்படும் படம்

ஆரம்பம் முதல் இறுதிவரையில் படம் முழுவதும் அக் கப்பலில் தயாராகும். ஜப்பானுக்கு அருகிலுள்ள கடலில் இப்படம் எடுக்கப்படும்.

கப்பலில் பிரயாணிகள் தங்கும் தளத்துக்கு அடியில் ஒரு வெடி விபத்து ஏற்படுகிறது; 1500 பிரயாணிகளைக் காப்பாற்றியாக வேண்டும். அப்போது கப்பல் காப்டன் படும் கஷ்டங்களையும், அவருக்கு ஏற்படும் சோதனைகளையும் கதை விளக்குகிறது. வெடி விபத்து ஏற்படுவது முதல் கடைசி நேரத்தில் பிரயாணிகள் ஆச்சரியமான முறையில் காப்பாற்றப்பட்டுக் கப்பல் மூழ்குவதுவிரையில் ஆகும் நேரம் வரைப் படம் ஓடும் காலமாகும்.

அற்புதமான காட்சிகள் சிலவற்றைப் படம் எடுக்க ஒரு ஹெலிகாப்டர் விமானம் பயன்

படுத்தப் படுகிறது. மற்றக் காட்சிகள் எல்லாம் விபத்துக்குள்ளாகும் கப்பலிலும் அதனுடன் செல்லும் மற்றொரு போர்க் கப்பலிலுமுள்ள காமிராக்கள் மூலம் படம் எடுக்கப்படுகின்றன.

ராபர்ட் ஸ்டாக், டோரதி மலோன், ஜார்ஜ் ஸாண்டர்ஸ், எட்மண்ட் ஓ'பிரியன் முதலியோர் 'கடைசிப் பயணத்தில்' நடிக்கின்றனர்.

காஷ்மீர் வெள்ளச் சேதக் காட்சிகள்

இவ்வாரச் செய்திக் கதிரில் காணலாம்

வெள்ளங்கள் பயிர்களுக்கு விளைவித்த நாசத்தையும், வெள்ளங்கள் காரணமாகப் போக்கு வரத்து துண்டிக்கப்பட்டதையும் சொத்துக்களுக்குச் சேதமேற்பட்டதையும் தத்ரூபமாக எடுத்துக்காட்டும் காஷ்மீர் வெள்ளச் சேதம் பற்றிய காட்சிகள் இந்தவாரச் செய்திக்கதிரில் பிரதான இடம் பெற்று விளங்குகின்றன.

ஹைதராபாத்தில் திறந்தவெளியில் நடைபெற்ற குழந்தைகள் கலை விழா, சாதாரண போக்கைக்கொண்டு உருவாக்கப் பட்ட புதிய வடிவ அமைப்புகள் சிம்லாவில் நடைபெற்ற பனிச்சறுக்கு விழா ஆகிய சம்பந்தப்பட்ட காட்சிகளையும் இந்தப் படத்தில் காணலாம்.

"ஸ்ரீதருக்கு பட்டம்"

கல்யாண பரிசு எழுதி டைரக்ட் செய்த ஸ்ரீதருக்கு பட்டப்பரிசு கிடைத்துள்ளது. தஞ்சையில் ஒருவிழாவில் இவரை 'கலைஞர் திலகம்' என்று பட்டமளித்து சிறப்பித்தனர். இவ்விழாவிற்கு ஏ. ஓய். எஸ். பரிசுத்தநாடார் தலைமை தாங்கினர்.

திரு. ஆர். சுவாமிநாதன் தலைமை கொண்ட வரவேற்பு குழுவினரால் இந்த விழா ஏற்பாடாகியது.

சென்னையில் வெற்றிகரமாக கல்யாண பரிசு ஓடி வருகிறது. யாவரும் அறிந்ததே. இப்படம் வீனஸ் பிக்சர்சாரால் தயாரிக்கப்பட்டது.

"அல்லிப்பாவை"

என்ற வரலாற்றுக் காவியம் சினிமா புகழ் செருகளத்தூர் சாமா, புரட்சி நடிகர் நரசிம்ம பாரதி சினிமா கழஞ்சியங்களான கே. கே. பெருமாள் எ. கருணாநிதி, அப்பாதுரைசாமி கே. பி. பக்கிரிசாமி பி. கே. சரஸ்வதி, மேனகா, புதுமுகங்கள் வசந்த கோகிலம், இசைவாணி வேதவல்லி மாலா, பேபி ராஜி, இவர்கள் நடிக்க இருக்கும், கதை. அறவாழியின் மூலக்கதை கலைப்பித்தன் எ. வி. முத்துவின் எடிட்டிங் டைரக்ஷனில் உதவி கதாசிரியர் ராஜி. ஆறுமுகம் இவர்களால் மதுரை அசோக் ஸ்டுடியோவில் படம் எடுப்புக்கு ஆரம்பமாகிக்கொண்டு இருக்கிறது. நடிகர் நடிகை தேர்தல் முடிவடையும் தருணத்திலிருக்கிறது.

Edited & Published by K. Perumal Udayar,
EdapalayamStreet, Madras-3. Asst. Editor: C. J. Marthandam. B.A.
Printed by K. N. Thiruvengadam,
at his Ananda Parvathi Press, 30, Edapalayam St., Madras-3.

M. KANNAN

Government Approved
Fabricator and Contractor

(Regd. 10)

30, Wall Tax Road, Madras-3

Please Contact Us For

COLLAPSIBLE GATES, MAIN GATES,
WINDOW GRILLS VENTILATORS &
ALL OTHER BUILDING MATERIALS

STEEL TRUSSES AND ERECTION WORKS UNDERTAKEN

Specialist in Arc and Gas Welding
Stainless Steel Aluminium Gas Cutting
Works are also undertaken.

OUR MOTTO IS TO
SATISFY OUR CUSTOMERS

பயிற்சிக்கும் வெற்றிக்கும் உத்திரவாதம்

தபால் மூலம்

இலவசக் கல்வி போதனை

(ஸ்தாபிதம் 21-3-52.)

'F' குரூப் வகுப்புகள் ஆரம்பதேதி: 17-8-59.

தமிழ் அறிவுபெற்ற ஆண்-பெண் இருபாலரும் பள்ளியில் இடையே படிப்பை நிறுத்தியவர்களும், S. S. L. C. தேர்வில் தேறியவர்களும், தவறியவர்களும் கீழ்க்கண்ட 59-60ம் வருட சர்க்கார் தேர்வுகளுக்கு மாதம் மும்முறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பி இலவசமாக பயிற்சி அளிக்கப்படும். தேர்வின் வெற்றிக்கும், பாடங்கள் அனுப்பிப் பயிற்சியளிப்பதற்கும் உறுதிப் பத்திரம் வழங்குகிறோம். மாணவர்களின் கஷ்ட-நஷ்டங்களுக்கு எமது உத்திரவாதப்பத்திரம் பொறுப்பேற்றுக்கொள்கிறது.

(1) உத்கல்; B. A.; (2) B. Com.; (3) I. Com. (4) Inter; (5) Madras Metriculation; (6) Pre-University; (7) தமிழ் வித்வான் வகுப்புகள்; (8) சர்வீஸ் கமிஷன்; (9) (S. S. L. C. (Oct. 59 & March 60); (10) E. S. L. C. (11) கைத்தறி நெசவு; (12) விவசாயம்; (13) Accountancy; (14) Overseer; (15) Postal-clerk; (16) Postman; (17) கிராமணியம் & கர்ணம்; (18) ஹிந்தி வகுப்புகள் (பிப்ரவரி 60); (19) ஹோமியோபதி (தமிழ் & ஆங்கிலம்); (20) கிராம வைத்தியம்; (21) பேஸிக் ஆங்கிலம்.

1952-ம் ஆண்டு முதல் சொந்த அச்சகத்துடன் பல கிளை நிலையங்கள் நிறுவி ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு இலவசக் கல்வி பயிற்சியளித்து வருகிறது நமது கல்வி ஸ்தாபனம். ஆகவே 17-8-59 முதல் ஆரம்பமாகும் நமது F-குரூப் வகுப்புகளின் முழு விபரங்களுக்கு 15 n p. ஸ்டாம்புடன் விண்ணப்பித்து நமது வகுப்புகளில் சேர்ந்து பயிற்சிபெற்று பயன் அடைய அன்புடன் அழைக்கிறோம்.

கிளைகள்:- **சென்னை, சிலோன், மலேயா & தென் ஆப்ரிக்கா.**

தமிழ் நாட்டின் தனிப்பெறும் தபால் இலவசக் கல்வி ஸ்தாபனம்!

ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்

ரிஷிவந்தியம் S.O. தென் ஆற்காடு Dt.
கிளைகள்: சென்னை, மலேயா, சிலோன் & தென்னாப்ரிகா.

Wrapper printed at Sampath Press, Sowcarpet, Madras-1.